1296

# ஜகன்மோகினி

# JAGANMOHINI

1—10—58

25 நயா பைசா





# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

அக்டோபர் 1958. மலர் 35, இதழ் .10 விளம்பி ஸு புரட்டாசிமீ

## விஷய அட்டவணை

பக்கம்

இனி இதனாலெல்லாம் பயனில்லை.
—வி. கே. பார்த்தசாரதி 1

அடியாரும் இறைவனும்
—டி. எஸ். ராஜகோபாலன் 5

கல்யாணி
—ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் 9

காளிதாஸர் கனவு
கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி 16

மகிழ்ச்சியின் உருவம்
—அம்புஜம் 18

கைராசிக்காரி
—விஜயலக்ஷ்மி வரதராஜன் 21

கிழக்கு வெளுத்தது
—வை. மு. கோ. [169-188]

### இந்தியாவில் வாழ்க்கையும் இயற்கைக் காட்சிகளும்.

மனிதாபிமான சேவைகள் யாவற்றிலும் பழமையானது நோயுற்றவருக்குச் செய்யும் தொண்டுதான். மனிதன் பரோபகார உணர்ச்சி முதல்முதலாக உள்ளத்தைத் தூண்டியபோது அந்த சேவா உணர்ச்சியும் ஆரம்பமாகி யிருக்கவேண்டும். பெண்கள் இயல்பாகக் குழந்தைகள்மீது காட்டுகிற பரிவு, பிறகு வயதானவர்களேயும், இயலாதவர்களேயும், நோயுற்றவர்களேயும் கவனிக்கக்கூடியபடி விரிவடைந்தது.

இந்தியாவில் மொத்தஜனத்தொகையில் 80 சதவிகிதம்பேர் கிராமங்களில் வசிக்கிறார்கள். எனவே அங்குதான் அந்த சேவையாளர்கள் அதிகமாய்த் தேவைப்படுகிறார்கள். அந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக இந்தியா முழுவதிலும் வரிசைத் தொடராக சுகாதார-க்ஷேமநல நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

# இனி இதனாலெல்லாம் பயனில்லை :

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார்.

**பன்னிரண்டாண்டின் நிலைமை என்ன?**

சட்டசபைகள் திட்டங்கள் இட்டுவருகின்றன....சட்டங்கள் நிறைவேற்றிவருகின்றன....ஊழல்களை வெளிப்படுத்துகின்றன.....திருந்தவேண்டிய வழிகளைப் பேசுகின்றன....ஆனதுகளைக் கண்டிக்கின்றன....ஆகாததுகளை சிந்திக்கின்றன...ஒத்துழைப்பு வேண்டுகிறது...கூட்டுறவு தேடுகிறது....ஒழுங்கீனங்களை ஒழிக்கச்சொல்கிறது...சமதர்மம் பேசுகிறது...நேர்மனப்பான்மை கோருகிறது...துவேஷ மனப்பான்மை வெறுக்கிறது...எல்லாம் உயர்மட்டப் பேச்சுதான்—பேச்சு அரங்கம் விட்டுக் கீழிறங்கிவிட்டால், காரியம் அவரவர் பேச்சுப்படிதான்—பேசியதற்கும் செய்வதற்கும் சம்பந்தமில்லை. பலமும், பணமும் இருப்பவரையே தேடி ஓடுகிறது—இல்லாதவரை மேலும் கைவிட்டு வாட்டுகிறது—இந்தியக் குடியரசின் பன்னிரண்டாமாண்டின் நிலைமை இப்படியுள்ளது.

லோகசபையில், இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் பற்றிய விவாதம் நடந்தேறுகையில் ஒரு பிரதிநிதி, அரசாங்க நிர்வாகத்தில், திறமையின்மை, யோக்யமின்மை, ஒழுங்கீன ஊழல்கள்—இவை நிறைந்து மலிந்துவிட்டன என்றும், சட்டசபை அங்கத்தினரிடை யோக்யமான அறிவு குடியில்லை யென்றும் கூறுகிறார். இதுதானும் இன்று நாம் படும் அவஸ்தைகளுக்கெல்லாம் காரணம். பேச்சு சரிதான்—க்ஷேமலாப திட்டங்களிலும், வேலையில்லாத் திண்டாட்ட நிவாரண காரியமாகவும், உணவு உத்பத்தி விஷயமாகவும் பேசித் திட்டமிட்டுக் கமிட்டிகள் கூடி யோசனை சொல்லி, அந்த யோசனைகள் பயன்படுமா என்பதைப் பார்க்க கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆனால், குடிகள் க்ஷேமமென்பதையோ, லாபமென்பதையோ, உணவு என்பதையோ, உத்யோகமென்பதையோ இந்த ஜன்மத்திலோ இன்னமும் இரண்டு மூன்று தலைமுறைக்கோ பார்க்கப்போவதாகயில்லை. இதனாலெல்லாம் கண்டலாபம் கோடம்பாக்கம் ரயில்வேஷ்டேஷன் கொள்ளையும், நவநாகரீகமான எளிதில் கண்டறிய முடியாத தனிப்பட்டாரதவும் அரசாங்க நிர்வாகிகளுடையவும் கணக்கு ஏமாற்ற மோசடிகளும் மற்றும் கள்ளமார்க்கட்டு காரணமாய் விலைவாசி உயர்வுந்தான்.

**உரிமைகளும் கடமைகளும்.**

சென்னை கார்பொரேஷன் "மாடல் பேகரி" (ரொட்டிக் கிடங்கு) நடத்தப்போகிறதாம். சென்னை அரசாங்கம் யாவற்றையும்விட முக்ய கைத்தொழில் வியாபார விஷயங்களிலும் தலையிட்டுத் தேசீயமாக்கிக்கொண்டு அரசியலை மறந்து, தொழிலியலில் சிக்கித் தவிக்கிறது. விவசாய வருமான வரி போடவேண்டுமென சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவு எத்தகையது? இதை யாராவது சிந்தித்ததுண்டா?

ஏற்கனவே விவசாயமென்பது அகௌரவமான தொழில், அநாகரிகரது உழைப்பு என்ற அடாத எண்ணம் நமது நாட்டு அச்சாணிகளான உழவர் மனத்தில் இரண்டாம் உலக யுத்தத்திற்கப்புறம் உண்டாக்கப் பட்டுவிட்டது. சண்டைக்குப் போர்வீரர்கள் திரட்டுவதற்காகவும், பின்னர் ஏற்பட்ட ஏ. ஆர். பி. உத்யோகங்கள் காரணமாகவும் திடகாத்ரமான உழவ வாலிபர்களுக்கும் உழவ மனிதர்களுக்கும் காகி அரை நிஜாரும், சட்டையும், காலுக்கு பூட்சும், தலைக்கு ஹாட்டும் கொடுத்து ரொட்டியும் காப்பியும் கொடுத்து பழக்கி, அதிகார அட்டகாசங்களை ஊட்டி வளர்த்துவிட்டு, யுத்த மடங்கியதும் அவர்களைக் கிராமத்திற்குப் போய் உழுது உழைத்துப் பழையது தின்னச் சொன்னால், அவர்கள் மனம் சம்மதியாது. எப்பாடு பட்டாவது பட்டணவாசத்திலிருந்தே கௌரவப் பிச்சையெடுத்தோ, பயமுறுத்திக் களவாடியோ, கள்ளமார்க்கெட்டுத் தரகர்களாகியோ வயிறு பிழைக்கக் கற்றுகொண்டு விட்டார்கள். ஜனத்தொகை அதிகரித்த காரணமாக பட்டணங்கள் சுற்றியுள்ள நஞ்சை புஞ்சை நிலங்களெல்லாம் வீடுகட்டும் மனைக்கட்டுகளாக, மனை 2000, 3000 ரூபாயாக விற்கக்கூடியதானதும், அநேகம் ஏகராக்கணக்கான விளை நிலங்களெல்லாம் ரொக்கப்பணமாக மறையலாயின. மரமடர்ந்த தோப்புகளும் காலிமனைக்காக வெட்டித்தள்ளப்பட்டன. இப்படிக்காக நிலமும் குறைந்து பயிரிடும் மனமும் மறைந்து, பயிருக்குவேண்டிய மழையும் தடுக்கப்பட்ட நிலையில், குடியரசாங்கத்தாரது சட்ட திட்டங்கள் வேறு. ஜமீன்தாரர் அட்டகாசம் ஒழிந்தது. பரந்த நிலச்சுவான்தாரர்களும் கூடாதென்ற மனப்பான்மை அரசாங்க அதிகாரிகள் மனத்தில் இருந்து வருகிறது. உழைப்பவனுக்கு உரிமையில்லையா என்ற முதலாளி தொழிலாளி துவேஷம் உண்டாக்கிச் சட்டம் நிருவி, நிலங்களைத் துண்டுபோட்டும், உழுபவர்களுக்கு உரிமைகளும், சொந்தக்காரர்களுக்கு கடமைகளும் சட்டப்படி பங்கீடு [illegible]யப்பட்டுவருகிறது. சமூகத்தில் பிராமண அப்பிர

183224

மணத் தவேஷம் ஊட்டி வளர்ந்து முளைத்திருக்கும் நிலையில், இதனல் நிலம் வைத்துக்கொள்ளவும் எவர்க்கும் இஷ்டமில்லை. இருந்து உழைத்துப் பயன்தரச்செய்யவும் உழைப்பாளிகளுக்கு மனமில்லை. போதாக்குறைக்கு நடந்தேறும் சட்டசபையில் வருடத்திற்கு 3600 ரூபாய்க்கு மேற்பட்ட விளைவு வருமானம்பெறும் விவசாயிகளிட மிருந்து வருமானவரி வசூலிக்க சட்டம் நிருவப்பட்டாகி விட்டது. கண்ணியம் மிக்க உழவுத்தொழிலை எவ்வளவு இழிவுபடுத்த வேண்டுமோ அவ்வளவுக்குமான வசதிகள் செய்துகொண்டே அரிசியில்லையே, விலைவாசி ஏறுகிறதே யென்று அழுவோமானல், இந்த வரவற்ற செலவு முறைக ளால் எவர் வயிறு நிரம்பும்? எந்தநாடு செழிக்கக்கூடும்?

விஞ்ஞான வளர்ச்சியில் செயற்கை மழை பெருக்கி, செயற்கை அரிசி பெருக்கி செயற்கை மனிதர்களைத்தான் சாப்பாடு செய்யச் சொல்லவேண்டி வரும்—இயற்கையெல் லாம் மறைந்து போகவேண்டியதுதான்.

**கிராம ராஜ்யமா இராம ராஜ்யமா?**

வயிற்றுப் பசியும் விலைவாசிப் பளுவும் இப்படி அமுக்க, பஞ்சாயத்து சட்டம் நிறைவேறிவிட்டது சட்ட சபையில். 11 மாவட்ட போர்டுகளுக்குப் பதிலாக 358 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் அவற்றின்கீழ் பல பஞ்சாயத்துக்களுமாக நம்மை ஆண்டு சென்னை மாகாணத் தில் கிராமராஜ்யத்திற்குஅடிகோலப் போகின்றன. கிராம ராஜ்யமோ, பட்டண ராஜ்யமோ, கிராம ராஜ்யமாயிருந் தால் எல்லாம் சரிவர நடக்கும். எதுவும் சரியில்லையே யென்ற நிலையில், மாவட்ட போர்டுகளை நீக்கிப் பஞ்சா யத்து யூனியன் கவுன்சில் கொணர்ந்தால், எல்லாம் சரியாகிவிடுமா? இலை மறைவு, காய் மறைவாய் நடந் தேறுவதெல்லாம் பகிரங்கமாய் நடந்தேற வசதியளிக் குமா?—பெருமாள் போய் பெத்த பெருமாளாய் வந்த கதையாய்த்தானிருக்குமோ என்னவோ?—கையிலிருக்கும் சுதந்திர குடியரசு முறையை ஊழலற்றதாக்கி, இருக்கும் அரசாங்க நிர்வாக வழியாகவே நாட்டில் க்ஷேம லாபம் நிலைத்திடச் செய்த பிறகு, கிராம ராஜ்ய யோசனை செய் தால் நலமாயிருந்திருக்கும். ஆனல் சுதந்தரத்தாருக்கு எதிலும் அவசரந்தானே—சுதந்தர தாகம் எப்பொழுதும் தணியாததல்லவா!—

**பிறந்ததுமே பறக்க ஆரம்பித்துவிட்டால்?**

ரூபா—அணு நீக்கி நயாபைசாவாக்கின கலவரமும், அதனல் பொதுமக்களுக்கான நஷ்டமும், மோசடிக்

காரர்களது விஷமமும் தீரவில்லை. அதற்குள், வருகிற அக்டோபர் முதல் தேதி முதல், சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களில் சதவிகித அளவு (மீட்றிக்) நிறை முறைகள் சட்டப்படிக்கு அமுலுக்கு வரப்போகின்றன. வயிற்றிற்கில்லாது தவிப்பவர்கள் கையிலிருக்கும் பைசாக்களும் அவர்களறியாது பிடுங்கப் பட்டுவரும் நிலையில், அவர்கள் வாங்கும் வஸ்துக்களிலும் அவர்களறியாது பங்கு பிடுங்கப்பட்டுப் போகும் போலிருக் கிறது இனி. கிராம ராஜ்யத்தில் "கிராம்" அளவு நிறை யில், என்னென்ன அவதிகள் நேரப் போகிறதோ—

எல்லாம் கடமைகளை மறந்து உரிமைகளைக் கொண் டாடுவதும், அவரவர்களுக்கு இஷ்டமானதுகளைச் சட்ட மாக்கி நிலைத்து நீடித்து நிற்பதுகளை அசைத்துப் போக்கு வதுமாக யிருக்கிறதே யொழிய, இருப்பதைத் திருத்தி வளர்த்துப் பயன்படச் செய்வதாகக் காணோம். ஒவ்வொரு வரும் தானே அரசியல் தலைவரும், பொருளாதார நிபுண ரும், சமூக சீர்திருத்தவாதியுமாகித் தனக்கிஷ்டமானதைத் திட்டமிட்டுப் போகும் காலமாய்விட்டது. அதிகாரிக ளாகவே நாடு நிறைந்துளதே யொழிய அதிகாரத்திற் குட்பட்டவர்களே இனி இல்லாத நிலை நேரிடும்போலிருக் கிறது. ஊர்ந்து தவழ்ந்து நடப்பதுவிட்டுச் சுதந்தரக் குழந்தைகள் பிறந்ததுமே பறக்க ஆரம்பித்துவிட்டால், திடீரென கீழே வீழ்ந்தால் தவழவோ, நடக்கவோ தெரி யாது தவிக்குமே!— இனி இதனையெல்லாம் பயனில்லை.

என்னதான் நல்லெண்ணத்துடன் அரசாங்கம், அரசு தவிர்த்த யாவற்று பொறுப்புக்களிலும் தலையிட்டு கட்டுப் பாடுகள் திட்டமிட்ட போதிலும், மனப்பான்மை மாறாத வரைக்கும் பொய்யும், ஏமாற்றமும், மோசடியுந்தான் ஒவ்வொரு கட்டுப்பாட்டினாலும் விளையும். இதை நாம் பிரத்யக்ஷானுபவமாகவே கண்டு அனுபவித்து வருகிறோம். அரசு, இனி அரசுமட்டும் செலுத்தி, இதர வியாபாரங் களை வியாபாரிகள் கையில் விட்டால்தான், அவர்கள் தமக்குள் போட்டியிட்டு யோக்யமும், யோக்யதையும் நாட்டில் ஓர்நிலை வந்து ஸ்தாபிதமாக வழியுண்டு. இல்லை யேல், யோக்யமும் யோக்யதையும் பண்டைக்கால பரிகாச வஸ்துக்களாகப் புறக்கணிக்கப்பட்டு மோசடியும் ஏமாற் றலுமே நவநாகரிகமாகும், மதாசாரத் துறைகளில் உள்ளதுபோல—எனவே நடக்க வேண்டியதைச் சிந்தித் துக் கவனித்துக் காங்கிரஸ் கட்சி செய்து முடிக்குமா?

# ★ அடியாரும் இறைவனும் ★

ஸ்ரீ டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ. எல். டி.
ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

இறைவனுக்கென ரோஜா மாலையொன்று வாங்கிச் சென்றேன், பெருமிதத்துடன். கோயில் வாசலில் அடியார் ஒருவர் என்னையும் என் கையிலிருந்த மாலையையும் உற்றுப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தார். இதுகண்டு நானும் சிறிது தயக்கங்கொண்டேன். அவர், "ஓய்! இதைச் சாத்த மாட்டார்கள்; பெருமாளுக்கு ஏற்றதல்ல" என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் இறைவனுக்கென மிகவும் ஆசையோடு வாங்கிக் கொண்டு வந்த மாலையை அவனுக்குச் சாத்தமாட்டார்கள் எனில், நான் சரியான நிலையில் இல்லையா, என்னால் மாலைக்கு என்ன தோஷம் வந்தது என்றெல்லாம் ஐயமெழுந்தது. வாட்டமுற்ற என்னைப் பார்த்து அடியாரும், "நான் சொல்லுவதைக்கேளும். இங்கு பெருமாளுக்கு ரோஜாப் பூவே சாத்துவது இடையாது; அதிலுள்ள முள் பெருமாளது திருமேனியில் படுமோ என்ற காரணத்தால். இது பெரியோர்களது ஆணை; நேற்று இன்று நடப்பதல்ல" என்றார். நான் சிறிது ஆலோசனை செய்தேன். பண்டை நூல்களில் படித்தது நினைவிற்கு வந்தது. மெய்யடியார்கள் சிலர், இறைவனுக்கு பால் நைவேத்யம் செய்யும் போது அவனுக்குப் பால் சுடுமேயென்று விசிறியால் விசிறுவார்கள்; எண்ணெய்க் காப்பு ஆகும்போது எண்ணெய் இறைவனது கண்ணில் வழியுமென்று பயந்து கையால் வழித்துவிடுவார் ஒருவர். அடியார்களது மனப் பண்பினைப் பற்றி இவ்வாறு நினைக்கும் போது, "பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே", "உன் அடியார்க்கு என்செய்வன் என்றே இருத்தி நீ" என்பன நினைவுக்கு வந்தன. சாஸ்திரங்களில் முள் உள்ள மலர்கள் பூஜைக்கு ஏற்றதல்ல என்று இறைவன் கூறியதும், இதற்குக் கருத்து, அடியார்களது கையில் முள் தைக்கும் என்று இறைவன் வருந்துவான் என்பதும் மனத்தில் தோன்றின. இவ்வாறு இறைவனுக் கென்றே பரியும் மனமுடைய அடியார்களது மேன்மையையும், அடியார்க் கென்றே இருக்கும் இறைவனது மெருமனப் பான்மையையும் நினைந்து சிறிது மெய் மறந்து நின்றேன்.

என் எண்ணங்கள் யாவற்றையும் உணர்ந்தவர் போல, அந்த அடியாரும், "இறைவனுக்கு என்ன நேருமோ என்று பயப்படுவது நமது நாட்டுக்குப் புதியதன்று; அவனும் நமக்கு நன்மையே செய்யக் காத்திருப்பான்; நமக்காகத் தான் இங்கு வந்து சாய்ந்துள்ளான்" என்று சொல்லிக் கொண்டே பெரிய திருமலை நம்பிகளது வைபவத்தை எடுத்துரைத்தார்.

பெரிய திருமலை நம்பி என்பவர், ஆளவந்தாருடைய சிஷ்யர்களுள் ஒருவர். ஒரு நாள் ஆளவந்தார், திருவேங்கடத் தெம்பெருமான் விஷயமாக,

சுமந்து மாமலர் நீர்சுடர் தீபங்
கொண்டு
(அ)மர்ந்து வானவர் வானவர்
கோனொடும்
நமன்று (எ)ழுந் திருவேங்கடம்
நங்கட்குச்
சமன்கொள் வீடு தருந்தடங்
குன்றமே

என்ற பாசுரத்திற்குப் பொருள் கூறும்போது, "பரமபதத்தி லுள்ள நித்ய சூரிகளுக்கும் மண்ணிலுள்ளோர்க்கும் ஒக்க முகங்கொடுத்துக் கொண்டு நிற்பதால், திருவேங்கட மலைக் கு ஏற்றமுண்டு. அங்கு எம் பெருமானுக்கு நாள் தோறும் ஒரு குடம் தீர்த்தம் கொண்டு கொடுப்பவர் யாரேனு முண் டோ?" என்று கேட்கப் பெரிய திருமலை நம்பியும் தாம் செய்வ தாக ஒப்புக் கொண்டு உடனே புறப்பட்டார். அங்குச் சென்று எம்பெருமானது முன்னிலையில் ஆசாரிய நியமனத்தை விண் ணப்பம் செய்து, கோயிலிலி ருந்து இரண்டு குரோச தூரத் திலுள்ள பாபவினாசி என்ற அருவியிலிருந்து நாள்தோ றுந் தவறாமல் ஒரு குடம் தீர்த் தம் திருமஞ்சனத்திற் கெனக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் நம்பிகள் கோயிலை நோக்கித் திரும்பிக் கொண்டி ருந்தார். உதித்து ஐந்து நாழிகை யிருக்கும். கீழ்த் திசையிலுள்ள மலைச் சிகரங்க ளிலிருந்து மேலெழுங் கதிரவ னது வெள்ளிய கிரணங்கள், பால்போலும் வெளுத்த இவ ரது உடைகளில் தாக்கி அவற் றின் தூய்மையைப் பன்மடங்கு பெருக்கின. அவரது தலையின் மேலிருந்த பட்டுச் சும்மாட்டின் மேல் வெள்ளிக் குடத்தில் திரு மஞ்சனத்திற்கான தீர்த்தம் நிரம்பியிருந்தது. அவர் திரு வேங்கடமுடையானைப் பற்றிய பாசுரங்களைவாயாரச் சொல்லிச் சுவைத்துக் கொண்டு நடந் தார். எதிரிலுள்ள தோப்பு ஒன்றிலே நெடியதொரு உரு வத்தைக் கண்டார். அவரு டைய கண்கள் அந்த உருவத் தையே நாடின. சாதாரண மாக மரந்தரைக் காட்டிலும் சிறிது உயர்ந்ததாகத் தோன் றியது, அவ்வுருவம். அதன் கையில் பெரியதொரு வில் காதளவும் உயர்ந்து நாண் கழற்றப் பெற்றிருந்தது. இது கன்டு நம்பி பின்வருமாறு தம் மனத்தில் நினைக்கலானார்; "இவனைப் பார்த்தால் சாதார ணமான வேடுவன் போல் தோன்றவில்லை. விசாலமான நெற்றி, பரந்த கண்கள், கோல நீள் கொடி முக்கு, சிவந்த உதடு, முகத்திலோ தனிப் பட்ட ஓர் ஒளி—"

இவ்வாறெல்லாம் தம்முள் சொல்லிக் கொண்டு தயங்கி நிற்பவரை நோக்கி வந்தான் அவ்வேடன். அவனது நடை யை உற்றுநோக்கின நம்பிக ளது கண்கள், "சதுர்கதி: என்று நாலு வகைப்பட்டது இறைவனது நடை என்று நான் கேட்டிருந்தேனே யொழிய, இன்று நான் இவ் வகை நடையை இந்த வேட னிடந்தான் நேரில் காணப் பெற்றேன். மிருகேந்திரனு டைய அச்சமின்மையும், மத்த கஜத்தின் பெருமிதமும், புலி யின் சிவட்கும், ரிடபத்தின் மேனணிப்பும் இவனிடம் காண் கின்றேன்" என்று தமக்குள் வியந்துகொண்டார். அவன் இவரை யணுகி, "தாத்தா! எனக்குத் தாகம் அதிகமாயி ருக்கிறது. ஓரடிகூட எடுத்து

வைக்க இயலவில்லை. ஒரு கை தண்ணீர் கொடும்; உமக்கும் புண்ணியமுண்டு'' என்றான்.

நம்பி, "இது திருவேங்கடமுடையானுக்குத் திருமஞ்சனத்திற்காகக் கொண்டு போவது; அதிலிருந்து கொடுக்கக் கூடாது'' என்றார்.

வேடன், ''தாத்தா! உம்மைப் பார்த்தால், நல்லவராகத் தோன்றுகிறது. எனக்கு உயிர் போய்விடும்போலிருக்கிறது. ஒரே ஒரு கை தண்ணீர் கொடும்'' என்றான்.

''என்ன, தர்ம சங்கடமாயிருக்கிறதே! உனக்கு அவசியம் கொடுக்கத்தான் வேண்டும். உனக்குக் கொடுத்தால் விஞ்சியது பெருமாளுக்கு உபயோகப்படாது. நான் மறுபடியும் பாபவினாசனிக்குப் போய்க்கொண்டு வருவதானால், திருமஞ்சன வேளை தப்பிவிடும். என்னை ஏன் இப்படி நெருக்குகிறாய்?''

''தாத்தா! நீங்கள் மனது வைத்தால் கொடுக்கலாம். தவித்த வாய்க்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லலாமா? ஒரு கை தண்ணீர் கொடுத்தால் என்ன குறைவு?'' என்றான் வேடன்.

"எனக்கு ஆசாரியனது ஆணையப்பா! ஒரு நாளாவது திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் கொண்டுபோகாமல் இருக்கக் கூடாதே!'' என்றார், நம்பி.

"ஆமாம்! ஜுரம் வந்தால், என்ன செய்வீர்?''

"காலில் பலம் இருக்கும் வரையில் செல்வேன். ஏன் வீண் வாதம் செய்கிறாய். நான் போகவேண்டும். என்னைத் துன்புறுத்த வேண்டாம்.',

சிறிது புன்னகையுடன் வேடன், "சரி, உம் விருப்பப்படி நீர் போகலாம். கொடுக்க மாட்டேன் என்றால் நான் என்ன செய்வது? குடத்தில் மாத்திரம் தண்ணீர் குறையாமல் கொண்டுபோவீராக'' என்றான்.

''கால தாமதம் ஆகக் கூடாது'' என்று சொல்லிக்கொண்டு நடந்தார் நம்பிகள், "தாயே தந்தையெனும்'' என்ற பதிகத்தை அனுசந்தானம் செய்து கொண்டு. வேடுவனும் அவரைத் தொடர்ந்தான். சிறிது தூரம் செல்லுவதற்குள் குடம் கனம் குறைவதையுங் கண்டார்; கீழே இறக்கினார்; குடத்திலிருந்து தாரையாகத் தண்ணீர் விழுவதைக் கண்டார். பின்னே திரும்பினார்; வேடனது கையிலுள்ள வில்லில் நாணேற்றப்பெற்றிருப்பதையும், அம்பு ஒன்று கீழே விழுந்திருப்பதையுங்கண்டார். வேடனும் நகைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு சிறி, ''பிள்ளாய்! நீ அடாது செய்தாய். இன்று அப்பனுக்குத் திருமஞ்சனம் இல்லாது போயிற்று. இதுவரையில் எனது ஆசாரியன் ஏவியபடி நடந்து வந்தது, நான் செய்த முன்வினைப்பயனால் இன்று எம்பெருமானுக்கு நான் ஒன்றும் செய்ய இயலவில்லை. திருமஞ்சனம் தவறலாகாது. நான் போய்த் தீர்த்தம் கொண்டு வருகிறேன். மறுபடியும் நீ இவ்வாறு செய்யலாகாது'' என்றார்.

வேடுவனும் சிரித்துக் கொண்டு, "தாத்தா! உமக்கு உடல் வலி குன்றியிருக்கிறதேயொழிய, மனோவன்மை குன்றவில்லை. நீர் போகவேண்டாம்; சற்று இங்கேயே இரும். என்

னுடைய ஆற்றலினால் இங்கேயே ஒரு நீர்நிலை காட்டுகிறேன், பாரும்'' என்று ஒரு பாறையின் மீது அம்பை எய்தான். பாறை பிளந்து அதனின்றும் தாரையாகத் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. எனினும் ஆசாரிய நியமனத்தைத் தட்டக் கூடாதென நம்பிகள் பாபவினாசனிக்கே புறப்பட்டார். வேடனும் அவரை மறித்து, ''தாத்தா! நான் சொல்வதைக் கேளும். நீர் வயோதிகராகையால் தினமும் இவ்வளவு தூரம் நீர் செல்லுவது எனக்குக் கால் வலிக்கின்றது நான் உம்மைத் தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீர் இங்கேயே தீர்த்தம் எடுத்துப் போகலாம்; இந்தத் தீர்த்தம் திருவேங்கடமுடையானுக்கு மிகவும் உகப்பாக இருக்கும்'' என்றான். நம்பிகளும், ''நீ யார்? உன் மனத்தில் தோன்றியவையெல்லாம் சொல்கிறாய்'' என்றார். வேடுவனும், ''நான் யார் பாரும்'' என்றான். நம்பிகள் தமது முன்னிலையில் திருவேங்கடமுடையான் நின்று கொண்டிருப்பதைக் கண்டு வேரற்ற மரம்போல் விழுந்து ''அப்பனே! உன்னுடைய கருணையன்றோ கருணை! நான் நெடுந்தூரம் போகவேண்டியிருக்கிறதென்றன்றோ நீ இவ்வாறு செய்தாய்? 'உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி நீ' என்றார் ஆழ்வார்; இதனை நான் நேரில் கண்டு கொண்டேன். நீ கேட்ட சிறுகை நீர் நான் உனக்குக் கொடுக்க மறுத்தேன்; நீ எனக்கெனப் பெரியதொரு சுனையைத் தோற்றுவித்தாய்! 'கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்' என்று ஸௌலப்யத்தை பற்றிப் பாடினர் பெரியோர். நீ வானவர்களுக்கும் வேடுவர்களுக்கும் வானரங்களுக்கும் ஒக்க முகங் காட்டுகிறாயென்று யாவரும் உன்னைப் புகழ்கின்றனர். மனிதரில் கடையனான எனக்கும் நீ காட்சியளித்தாய்! உன் பெருமையன்றோ பெருமை!'' என்று பலவாறு புகழ்ந்து தெளிந்தெழுந்தார். அசரீரி ஒன்று, ''நீர் தினந்தோறும் இந்த இடத்திலிருந்தே திருமஞ்சன தீர்த்தம் எடுத்துக் கொண்டு போகலாம்; இதற்கு ஆகாச கங்கை என்று பெயராகும்'' என்று சொல்லியது. நம்பியும் அங்கிருந்து குடத்தில் தீர்த்தத்தைக் குடத்தில் பூரித்துக்கொண்டு திருமஞ்சன வேளை தவறாமல் கோயிலுட் சென்றார்,



## முழக்கம்

வீட்டுக்காரர்:- ஏன்சார் ரேடியோ ஸிலோனும், சினிமா பாட்டும் காதைத் துளைப்பது போதாது கிராமபோன் வேறு வைத்து கொல்லுகிறீரே?...

வாடகைகாரர்:- இதோ பாருங்கள். கோபம் வேண்டாம். உங்கள்வீட்டு குழந்தைகள் போடும் கூச்சலை விட இது தேவலை என்றுதான்... அதை அடக்கினால் ...நான்...

வீட்டுக்காரர்:- ...?

# கல்யாணி

—ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்—

"என்ன....ராம்! நீங்களே இப்படி மனம்இடிந்துபோய் உட்கார்ந்து விட்டால் குழந்தைகளின் பாடென்ன?"

பதில் இல்லை. ஸ்ரீமான் ராமரத்தினத்திடமிருந்து நீண்ட பெருமூச் சொன்று தான் வெளியே கிளம்பி வந்தது.

"உத்தியோகத் துறையில் இரும்பு மனிதன் என்று பெயர் வாங்கிய நீரா இப்படி கண்ணீர் விடுவது! வேண்டாம் சார்! பகவான் மேல் பாரம் போட்டுவிட்டு தைரியமாக இருங்கள். எல்லாம் அவன் செயல்...." என்று வெங்கோபராவ் தன் நண்பருக்கு இதமாக தைரியம் சொன்னார். அச்சமயம் ராமரத்தினம் இருந்த துன்ப நிலையில் யார் என்ன தைரியம் சொன்ன போதிலும் அவருடைய கவலை குறையும் படியாக இருக்க வில்லை. முகம் சுண்டிப்போய் கண்களில் நீர் மல்க அவர் உட்கார்ந்திருந்த பரிதாப நிலையைக் காணும்பொழுது கல் மனமும் கரைந்துவிடும்.

அவருடைய அருமை மனைவி கல்யாணி ஆபரேஷன் மேஜைமீது கிடத்தப் பட்டு, உயிருக்கு மன்ருடிக் கொண்டிருந்தாள். ஆபரேஷன் என்றுல் வெரும் 'மைனர்' ஆபரேஷனு? கர்ப்பப் பையில் பெரியதொரு கட்டியாம். மயக்கம் கொடுத்து இரண்டு மணிப் பொழுது ஆபரேஷனும்! அடியம்மா! இந்த இருபத்தைந்து வருடங்களில் அவள் அத்தியாவசியமான வேலை தவிர என்ருல் பிரசவகாலம் போன்ற சமயம் தவிர மத்த நாட்களில் எவ்வளவோ பலவீன நிலைஏற்பட்டாலும், படுக்கையில் படுத்தவள் இல்லை.

ஓயாத உழைப்பாளி; மகா உத்தமி; கணவனின் இங்கிதமறிந்து இசைவாக நடப்பாள். அவருடைய மனம் கோணும்படி ஒரு தடவை கூட நடந்தவள் இல்லை.

"தான் அவளை, அவள் பூ உள்ளத்தை வாடாமல் வதங்காமல் காப்பாற்றினேனே? அவளுடைய ஆசை அபிலாஷைகளை நிறைவேற்றினேனே?...." என்ற சந்தேகம் இன்று தான் உதித்தது ராமுவுக்கு. "ஐயோ! அவள் போய்விட்டால்???...உலகமே அஸ்தமித்துவிடும் போன்ற திகில் அவரைச் சூழ்ந்துகொண்டது. பிறகு? இந்த வாழ்க்கை என்னும் கடலைதான் தன்னந்தனியனுகக் கிடப்பது எப்படி?" என்று வியந்தார். துயரத்தாலோ அல்லது பிரிய நாய

கியைப் பிரிய நேரிடுமோ என்ற பீதியாலோ அவருடைய உடல் கடகடவென்று நடுங்கவாரம்பித்தது. "கல்யாணீ! என் கண்ணே!" என்று அரற்றினர். அப்படியே துவண்டு நண்பர் மேல் சாய்ந்தார். அருகில் அமர்ந்திருந்த வெங்கோபராவ் நண்பரை ஆதரவுடன் தடவிக் கொடுத்தவாறு, ஏதோ காரியமாக அந்தப் பக்கம் வந்த 'வார்டுபா'யிடம்சொல்லி குளிர்ந்த ஜலம் ஒரு டம்ளர் வரவழைத்துக் கொடுத்தார்.

கண்ணை மூடிக் கொண்டு சாய்ந்தபடி அமர்ந்திருந்த ராமரத்தினத்துக்குத் தான் இனியாளுடன் வாழ்ந்த இனிய வாழ்க்கை சினிமாப் படம்போல் படிப்படியாக நினைவில் வந்து மறைந்தது.

ஆமாம். அவர்களுடைய கல்யாணம் நடந்து இருபத்தைந்து வருடங்களாயிற்று. கல்யாணத்தின் பொழுது கல்யாணிக்கு பதினைந்து வயதுதான். பசும்பொன் நிறம். ஐந்தடி ஒரங்குலம் உயரம் இருப்பாளோ அல்லது இன்னும் குள்ளமோ? ஆனால் உயரத்துக்கு தகுந்த பருமன். கிளி கொஞ்சும் முகம் என்பார்களே அது போல் ரவிவர்மா வரைந்த படம்போல் வசீகர தோற்றம். உதட்டில் எப்பொழுதும் மோகனப் புன்னகை ததும்பும். பளிங்கு போன்ற பரிசுத்த உள்ளம். அமரிக்கையும் அடக்கமும் பிரதிபலிக்கும் அழகிய விழிகள். கடைந்தெடுத்த தங்கப் பதுமைபோல் கல்யாணி ராமரத்தினத்துக்குத் தோன்றினாள்.

ராமரத்தினமும்தான் வனப்பில் குறைந்தவரா? நல்ல வாட்ட சாட்டமான உடலமைப்பு. இருபத்திநாலு வயது வாலிபன். களை சொட்டும் முகம். உதட்டில் உருதி ஜொலிக்கும். படிப்பிலோ அவர் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாக B. sc(Hons)-ல் முதல் ஸ்தானத்தில் தேறினதும் புகழ் பெற்ற கம்பெனி ஒன்றில் நல்ல உத்தியோகமும் கிடைத்தது. பெண்களைப் பெற்ற பல பெரிய மனிதர்கள் நான் நீ என்று ராமரத்தினத்துக்கு பெண் கொடுக்க வந்தார்கள். அவ்வளவு பெண்களிலும் ஆறடி உயரமுள்ள அவருக்குக் கல்யாணிதான் ரதியாகக் காக்ஷியளித்தாள். அவருடைய நண்பர்கள் "என்னடா உன் மனைவி உன் இடுப்புக்கு வராளேடா!" என்று பரிகாசம் செய்யவே அவர், "ஆமாம்டா, அவளைத் தூக்கிச் சட்டைப் பையில் போட்டுண்டு ஆபீஸுக்குக்கிளம்பி விடலாம் என்றுதான் எண்ணம்" என்று சவால் விட்டார். "அடாடா! முன் யோசனையுடன்தான் செஞ்சுண்டிருக்கே" என்று எல்லோரும் கொல் என்று சிரித்தார்கள்.

தன் மைந்தனுக்குப் பலப் பணக்கார குடும்பங்களிலி

ருந்து எத்தனையோ ஏகபுத்திரிகளின் ஜாதகங்கள் வந்துகுவிந்தாலும்கூட ராமரத்தினத்தின் தகப்பனார் நிறைந்த குடும்பத்தில் உதித்த பெண்ணான கல்யாணியையே தன் நாட்டுப்பெண்ணாகத் தேர்ந்தெடுத்தார். நாலு பெயர் நடுவில் வளர்ந்த பெண்ணானதால் அனுபவமுள்ளவளாகவும், எது சரி எது தவறு என்பதை நன்கு அறிந்தவளாய், குடும்பத்தை சிரத்தையுடனும் பாங்காகவும் நடத்தத் தெரியும் என்றும் அவர் அபிப்பிராயப்பட்டார். அவருடைய எண்ணத்துக்கு ஏர்வையாகவே தெய்வமும் நடத்தவேண்டுமா?

கல்யாணி புக்ககத்துக்கு வந்து, இரண்டு வருடங்களுக்குள் அவளுடைய மாமியார் போய்விட்டார். அந்தப் பெரிய குடும்பத்து சுமை முழுவதையும் அவள் தாங்க வேண்டியதாயிற்று.

வீட்டில், சிறுவயதில் வாழ்விழந்த நாத்தனார். மைத்துனர்கள் இருவர். முதிய மாமனார் எல்லோரையும் சரிகட்டிக் கொண்டு சம்ஸார சகடத்தை இழுத்துச் சென்றாள் கல்யாணி. அவளுடைய கணவருக்கோ குடும்பத்தில் உள்ள ஆயிரம் தொல்லைகளை கவனிக்க அவகாசமில்லை. காலையில் விழித்துக் கொள்ளும் பொழுதே ஆபீஸ் யோசனையுடன்தான் படுக்கையிலிருந்து எழுந்திருப்பார் ராமரத்தினம். காலைக்கடன்களை முடித்துவிட்டு காப்பி அருந்தியபின் தகப்பனாரை விசாரித்துவிட்டு, உடன் பிறந்தவர்களுடன் நாலுவார்த்தைபேசுவதற்குள் மணி ஒன்பது அடித்துவிடும். சரி, பரக்கப் பரக்க சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குக் கிளம்பத்தான் அவருக்குப் பொழுது சரியாகவிருக்கும். மாலையில் வீடு திரும்பும் பொழுது அநேகமாக மணி ஏழு அடித்துவிடும்.

அன்பையும் அழகையும் குழைத்துச் செய்த பிம்பம் போன்ற கல்யாணி டிபனும் காப்பியும் எடுத்து வந்து கொடுத்தால், அவளைக் கண்ட அவருக்கு அன்றைய சிரமம் முழுவதும் மாயமாகிவிடும்.

நாத்தனார் அதிகாரம் செய்ய, நாட்டுப் பெண் குடித்தனம் எப்படியோ நடந்தது. புதிதில் நாத்தனார் தம்பி அகமுடையாளிடம் பிரியமாகத்தான் இருந்து வந்தாள். நாள் செல்லச் செல்ல நாத்தனார் பாக்கியத்தின் தோரணை அதிகரித்தது. ஆனாலும் கல்யாணி இதுபற்றி யெல்லாம் தன் கணவரிடம் ஒரு வார்த்தை சொல்லமாட்டாள். காலேஜுக்குப் போகும் மைத்துனர், ஆபீஸுக்குப் போகும் கணவர், காலை ஒன்பது மணிக்குள் சமையல் ஆக வேண்டும். அம்மூவரும் சாப்பிட்டு விட்டுக் கிளம்பிச் சென்ற பிறகு, மாமனார்

பூஜையை முடித்துக்கொண்டு மகளுடன் சாப்பிட உட்காருவார். இரண்டாம் பந்தி சாப்பிட்டு எழுந்திருக்கும் வேளைக்கு அநேகமாக மணி பன்னிரெண்டு அடித்துவிடும். பாக்கியமோ இந்தத் துருப்பை எடுத்து அந்தண்டை வைக்க மாட்டாள். பாவம் கல்யாணி! சாப்பிட்டுக் கையலம்பிய பிறகு, பத்துப் பாத்திரங்களை ஒழித்துப் போட்டுச் சமையல் அறையைத் துப்புரவாக்கும்வேளைக்கு டிபன் செய்யவேண்டிய 'டைம்' நெருங்கிவிடும். சரி டிபன் காப்பி தயாரானதும் ஒவ்வொருவருக்காகக் கொடுத்துக்கொண்டே இரவு சமையலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பெரிய குடும்பம். ஆனால் செய்வது ஒண்டி ஆள்!

"கல்யாணியை அடுத்த பெண்கள் இன்னும் கல்யாணமின்றி காலேஜிலும் உயர்நிலை பள்ளிக்கூடங்களிலும் படித்துக் கொண்டு உல்லாசமாக இருப்பவர்கள் இல்லையா? இவள் தலை எழுத்து இப்படி!" என்று வருத்தப்படுவார் ராமரத்தினம். தன்னை மணந்ததில் இவளுக்கு ஒருவித சுகமும் இல்லையென்று உள்ளம் உருகுவார். ஆனால் செய்வதென்னத்தை? சிறு உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறும் வயதான தந்தை, விதவை தமக்கை, படிக்கும் தம்பிகள். அந்தக் குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்பு அவருடையதுதானே. அவருக்கு மாலையிட்டவள் அவருடன் சேர்ந்து இன்ப துன்பங்களை அனுபவித்துத் தானே தீரவேண்டும். ஆனால் ஒருவிதத்தில் அவர் புண்ணியசாலி என்றே சொல்ல வேண்டும். தனது மண வாழ்க்கை அமைதியாகவும், இன்பகரமாகவும் பரிமளித்துக்கொண்டுதான் இருந்தது. கல்யாணி கட்டிக் கரும்பல்லவா! ஒரு நாளாவது தன்னுடன் தனிமையில் ஒரு சினிமாவுக்காவது போக வேண்டுமென்று ஆசைப்பட்டு அவள் கேட்டதில்லை. இன்ன புடவை வேண்டுமென்று துணிந்து கேட்டதில்லை. நகை பண்ணித் தாவென்று சண்டை போட்டதில்லை. இப்படியும் ஒரு பெண் உண்டா? ஒரு இடத்துக்கு சொல்லிக் கொள்ளாமல்போனதில்லை. தன் பெயருக்கு தகுந்தபடி சகல கல்யாண குணங்களுடனும் திகழ்ந்தாள் அவள். ஆனால் அவளுடைய தங்கமான குணத்துக்கு அவருடைய மனிதர்கள் தகுந்த விலை கொடுக்கவில்லை. அவருடைய தமக்கை பாக்கியம் அவளைத் தங்கள் குடும்பத்துக்குக் கிடைத்த அடிமைப் பெண் என பாவித்தாள். அவளைக் கண்டால் ஒருவித இளக்காரம், உள்ளூரப் பொறாமையும்தான். இதே சுபாவம் நாளடைவில் அவளுடைய குழந்தைகளின் மீதும் படிந்தது. தன் மற்ற தம்பிமார்கள் என்றால்

அவளுக்கு உசத்திதான். அவர்கள் வீட்டுக்குவந்ததும் ஓடி ஓடி உபசரிப்பாள். அதே ராமரத்தினம் வந்தாலோ? அவர்வந்து எவ்வளவு நேரம் செல்லட்டும். கல்யாணிதான் கைகாரியத்தைப் போட்டுவிட்டு அவள்தான் கணவருக்கு பலகாரமும் காப்பியும் கொண்டு வர வேண்டும். பாக்கியம் அவரை ஏன் என்றுகூட கேட்க மாட்டாள். உடன் பிறந்த தம்பிமார்களுக்குள் இதென்ன வித்தியாசம்! ஆனல் இவருடைய வீட்டில் வசிப்பதற்கு மாத்திரம் உரிமை கொண்டாடுகிருர்களே! கிட்டுவுக்கும், சங்கருக்கும் படிப்பு முடிந்து, வேலையாகிக் கலியாணமும் ஆயிற்று. ஆனல் பாக்கியம் அவர்களை தனிக் குடித்தனம் போக விடவில்லை. அப்பா எத்தனை நாளைக்கு உயிருடன் இருக்க போகிருர்? அவர் இருக்கும் வரைக்கும் பிரியாமல் ஒரே குடித்தனமாக இருந்துவிடுங்கள். அதன் பிறகு உங்கள் பாடு'' என்று பாக்கியம் அவர்களுக்கு உத்திரவு போட்டுவிட்டாள்.

பாக்கியத்துக்குக் கிட்டுவின் மற்றும் சங்கரின் மனைவிகள் என்ருல் செல்லம் தான். அவர்கள் இஷ்டப்படி சிநேகிதிகள் வீடுகளுக்கும், லேடீஸ் கிளப்புக்கும், சங்கீத சபாக்களுக்கும் போய்வரலாம். தானே அவர்களுக்கு தலை பின்னி, பூ வைத்து, சிங்காரித்தும் அனுப்புவாள். ஆனல், கல்யாணியிடம் மாத்திரம் முகம் கொடுத்தும் பேசமாட்டாள். கல்யாணிதானுச்சு அப்படி என்ன தவறு செய்து விட்டாள்? பாவம்! அவள் பெரிய தவறு, வீட்டுக்கு மூத்த நாட்டுப் பெண்ணுக வாய்த்ததா! இல்லை...எவ்வளவோ மூத்த நாட்டுப்பெண்கள் புக்ககத்துச் செல்வக் களஞ்சியமாகச் சீராட்டப் படுகிருர்களே. பின்னே? எல்லாம் அவள் பிறந்த வேளை. மேலும் பாக்கியம் வாழ்விழந்து பிறந்தகத்துக்கு வந்துவிட்ட ஒரு வருடத்துக்குள் கல்யாணிக்கு விவாகமாயிற்று. தன் வாழ்க்கை பாழாய்ப்போக, இவள் மாத்திரம் புதுமணப் பெண்ணுக சீரும் சிறப்புமாக வாழ்கிருளே என்ற வயிற்றெரிச்சல் பாக்கியத்துக்கு அந்தப் பொருமை அவளுடன் போகவில்லை. வீட்டில் எவருக்கும் பேதைக் கல்யாணியைக் கண்டால் ஆகவொட்டாமல் செய்தாள் அவள். கல்யாணியால் அவளுக்கு ஏற்பட்ட கசப்பு அவளுடைய கணவனென்ற பேராதரவில் தன் சொந்தத்தம்பி ராமரத்தினத்தின் மேலும்பாய்ந்தது. அவர்என்னவோ சாக்ஷாத் ராமச்சந்திரனைப்போல் தன் கடமையிலிருந்தும் நியாயத்திலிருந்தும் கடுகளவும் தவருமல் நடக்கிருர். இந்த வெருப்புத்தீ வர வர அவருடைய தகப்பனரிடமும் பரவ வேண்டுமா? அட அனியாயமே! அவர்கூட பெற்றபிள்

ளையிடம் பராமுகமாக இருக்கவாரம்பித்தார்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராமரத்தினத்தின் பார்வை கையில் அணிந்திருந்த வைர மோதிரத்தின் மேல் படிந்தது. கையைத் தூக்கி ஒரு கணம் பரிவாகப் பார்த்துவிட்டு, அதற்கு ஒரு முத்தம் ஈந்தார். ஆமாம். அது அவருடைய கல்யாண மோதிரம்தான். அதில் அவர் தன் அருமை மனைவியின் ரூபத்தைக் கண்டார் போலும்!

கல்யாணியுடன் அவர் நடத்திய இந்த இருபத்தைந்து வருட இன்ப வாழ்க்கையின் சின்னமாக அவள் அவருக்கு ஒரு பெண்ணையும் இரண்டு பிள்ளைகளையும் பரிசளித்திருந்தாள். பெண் கல்யாணமாகி புக்ககத்திலிருந்தவள் தற்சமயம் தந்தி கண்டு ஊரிலிருந்து வந்து கொண்டிருக்கிருள். பையன்கள் சின்னஞ் சிறுசுகள்.

இந்த இருபத்தைந்து வருஷங்களுக்கும் தன் கணவருக்குக் குடும்ப கஷ்டமே தெரியாதபடி கல்யாணி சாமர்த்தியமாகக் குடித்தனம் நடத்திவிட்டாள். இனி? இனி? அவள் போய்விட்டாலோ? தன் கதி? 'கல்யாணி! என் கண்ணே!" என்று ராம் வாய்விட்டு அரற்றினர். நண்பரின் வேதனையைக் கண்டு வெங்கோபராவுக்கு சகிக்கவில்லை. அவரை எவ்விதம் ஆசுவாசப் படுத்துவதென்று தெரியாமல் திருதிருவென்று விழித்தார்.

ராமரத்தினத்தின் உள்ளமோ தம் மனைவிபால் உதித்த கரைக்காணுத பச்சாதாபத்தால் தவியாகத் தவித்தது. அவளுக்கு தான் கணவர் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர செய்யவில்லை என்ற எண்ணம் உள்ளுணர்ச்சியைக் குத்திக் காட்டிற்று. ஒரு நாளாவது அவளுடைய விருப்பப்படி வேடிக்கையாக எங்கேயாவது அழைத்து சென்றேனு? அப்படி அபூர்வமாக எங்கேயாவது சபாவுக்கோ, சினிமாவுக்கோ சென்ருலுங்கூட கூண்டோடு கைலாசம் என்பார்களே, அது போல் தமக்கை, தம்பிமார்களின் மனைவிகள் என்று எல்லோரையும் கூட அழைத்துக் கொண்டுதானே போவார்! அவள் ஆசைப்பட்ட ஒரு புடைவையோ, நகையோ... எதுவும் செய்து கொடுத்ததில்லை அவர். மாதம் பிறந்தால் தகப்பனரிடத்தில் சம்பளத்தை கொண்டு வந்து கொடுத்துவிடுவார். அவருடைய மனைவிக்காகவாகட்டும், குழந்தைகளுக்காகட்டும், தகப்பனரும் தமக்கையும் ஏதாவது இஷ்டப்பட்டு வாங்கிக் கொடுத்தால்தான் உண்டு.

ஆனல் இன்று தான் அப்படி நடந்து கொண்டது தன் மனைவிக்குத் தாம் செய்த பெரிய அனியாயம் என்று புலனயிற்று போ

னும். "பாவம் கல்யாணி! பகவானே என் செல்வத்துக்கு உயிர்ப் பிச்சை அளிக்க வேண்டும். நான் செய்த பிழைகளை மன்னித்து அவளை எனக்குக் காப்பாற்றிக் கொடுங்கள். இனி என் செல்வத்தைக் கண் இமைக்குள் வைத்து போற்றுவேன்" என்று ராம் கடவுளைக் கெஞ்சினர்.

ஆபரேஷன் அறைக் கதவைத் திறந்து கொண்டு நர்ஸ் ஒருவள் பரபரப்பாக வெளியே வந்து எங்கோ சென்ருள். அதைக் கண்டு வெங்கோபராவ் நண்பரை தட்டி எழுப்பினர். "இன்னும் ரயில் வண்டி வந்திருக்காதா?" என்று ராம் ராவை வினவினர்.

கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ராவ் "இன்னும் ஐந்து நிமிஷம் போக வேண்டும். ஸ்டேஷனிலிருந்து அவர்களை நேராக ஆஸ்பத்திரிக்கே அழைத்து வரச் சொல்லி இருக்கிறீரா?" என்று விசாரித்தார் ராவ். 'ஆமாம்' என்று தலையை அசைத்தார் ராம். நண்பரின் மௌன வேதனையைக் கண்டு மிகவும் அனுதாபங் கொண்டார் ராவ். ராமின் பெண்ணும் மாப்பிள்ளையுமாவது சீக்கிரம் வரக்கூடாதா. அப்பொழுதாவது நண்பருக்குக் கொஞ்சம் ஆருதல் ஏற்படலாமோ என்ற பிரமை ராவுக்கு.

அதோ, ஆபரேஷன் அரங்கின் (தியேட்டரின்) கதவு திறக்கப்பட்டு பெரிய டாக்டர் வெளியே வந்தார். அவருடைய முகம் ஏன் இப்படி சோர்ந்து கிடக்கு? டாக்டர் மெதுவாக ராமை சமீபித்து, உதட்டை பிதுக்கிக் கைகளை விரித்தார்.

டாக்டரை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராமரத்தினம் அவருடைய செய்கையைக் கண்டு "ஐய்யோ என் கல்யாணி" என்று அலறி தடாலென்று சாய்ந்தார். ராவ் அலறியவாறு ராமை தேற்றி "ஏன் இப்படி கூச்சலிடுகிறீர்கள்" என்று வினவினர்.

ப்ரமை பிடித்த ராம் "என் கல்யாணி என்னை விட்டு போய்விட்டாளே..... டாக்டர் சொன்னதை கேட்கவில்லையா?" என்ருர். ஒன்றும் புரியாத ராவ் முழிக்கும் சமயம் அறை கதவு வழியாய் வந்த டாக்டர் ராமை தட்டிக் கொடுத்து, "ராம் நீர் அதிர்ஷ்டசாலி ஐயா! ஆபரேஷன் வெற்றி" என்று உற்சாக மூட்டினர்.

பித்தனைப் போல் ராம் டாக்டரின் கைகளை பிடித்துக்கொண்டு "நிஜமாகவா! என் கல்யாணி பிழைத்து விட்டாளா? சற்றுமுன்..." என்று முழித்தார்.

விஷயத்தை யூகித்த ராவ் "நீர் கண்டது கனவு. இது தான் நினைவு. வாருங்கள் பேஷண்டை பார்க்கலாம்" என்று ராமை தட்டிக் கொடுத்தார்.

✻

# காவிதாசர் கனவு.

## 12, சகுந்தலை பரத தர்சனம்:

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அபிமுகே மயி ஸம்ஹ்ருதமீக்ஷிதம்
ஹஸிதமன்ய நிமித்த க்ருதோதயம் |
விநயவாரித வ்ருத்த ரதஸ்தயா
ந விவ்ருதோ மதனோ நச ஸம்வ்ருத: ||

அப்பொழுது தபசிகள் காட்டு யானை ஓடி வருவதாகக் கூற அந்த ஆசிரமப் பெண்கள் வேகமாக மறைந்தார்கள். அரசனும் யானையை விரட்டச் சென்றான். ஆனால் சகுந்தலை செல்லும் பொழுது அரசனிருக்குமிடத்தை விட்டு நீங்க மனமில்லாமல் "அனசூயை! இந்தப் புல் என் காலைக் குத்திவிட்டது, என் மரவுரி மரத்தில் மாட்டிக்கொண்டது, கொஞ்சம் பொறு, நானும் வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே திரும்பித் திரும்பி அரசனைத் தன் கடைக்கண்ணால் பார்த்துப் பார்த்துத் தயங்கித் தயங்கிச் சென்றாள்.

தர்ப்பாங்குரேண சரண: க்ஷத இத்யகாண்டே
தந்வீ ஸ்திதா கதிசிதேவ பதாநி கத்வா |
ஆஸீத் விவ்ருத்தவதனா ச விமோசயந்தீ
சாகாஸு வல்கல மஸக்தமபி த்ருமாணாம் ||

அரசனும், "எனக்கு இப்பொழுது ஊருக்குப் போக மனம் வரவேயில்லை. என் உடல் முன் சென்றாலும் காற்றுக்கு எதிராகக் கொண்டுபோகப்பட்ட கொடியைப் போல் என் மனம் புறமே போகின்றது'' என்று கூறிச் சகுந்தலையை நினைத்துக் கொண்டே அவ்விடம் விட்டு நீங்கினான்.

கச்சதி புர: சரீரம் தாவதி
பஸ் சாதஸம்ஸ்துதம் சேத:
சீனம்சுகமிவ கேதோ:
ப்ரதிவாதம் நிய மானஸ்ய

### சகுந்தலையின் மணம்

பிறகு அரசன் வேட்டைக்கு வந்த பரிவாரங்களை அனுப்பி விட்டு விதூஷகனிடம் சகுந்தலையின் அழகைச் சிறப்பாகக் கூறினான்: "நன்றாக எழுதப்பட்ட சித்திரம் உயிரைப் பெற்றால் போல் அவள் பிரகாசிக்கின்றாள். பிரமன் தன் மனத்தின் கற்பனை சக்தியாலேயே அவளைப் படைத்தானோ என்று தோன்றுகிறது. கடவுளுடைய வல்லமையையும் அவளுடைய அழகையும் கவனித்தால் அவளுடைய சிருஷ்டி உலக நிர்மாணம் போலில்லாமல் புதிதாகவே தோன்றுகிறது. அவள் முகர்ந்து பார்க்கப்படாத மணம் வீசும் மலரோ, நகத்தால் கிள்ளப்படாத

தளிரோ, துளைக்கப்படாத மாணிக்கமோ, சுவைக்கப்படாத செந்தேனோ, புண்ணியங்கள் பரிபூர்ணமான பயனோ என்றே சொல்லலாம். அவளுக்கு நாயகனைக் கடவுள் யாரைப் படைத்திருக்கின்றாரோ தெரியவில்லை" என்றான்.

சித்ரே நிவேச்ய பரிகல்பித ஸத்வயோக
ரூபோச்சயேந விதிநா மநஸா க்ருதாநு |
ஸ்த்ரீ ரத்ந ஸ்ருஷ்டிரபரா ப்ரதிபாதிஸாமே
தாதுர்விபுத்வ மநுசிந்த்ய வபுஸ்ச தஸ்யா: ||

அநாக்ராதம் புஷ்பம் கிஸலயமலூநம் கரருஹை:
அநாமுக்தம் ரத்நம் மது நவமநாஸ்வாதித ரஸம் |
அகண்டம் புண்யானும் பலமபிச தத்ரூப மநகம்
ந ஜாநே போக்தாரம் கமிஹ ஸமுபபஸ் தாஸ்யதி விதி: ||

கண்வரில்லாததால் அரக்கர்கள் ஆசிரமத்தில் தொந்திரவு செய்கின்றார்கள் என்றறிந்து விதூஷகனை அரசன் ராஜதானிக்கு அனுப்பி தான் ஆசிரமத்திலேயே தங்கினான்.

அரசனுக்குச் சகுந்தலையிடம் காதல் வளர்ந்தது. "தவத்தின் வல்லமையை யறிவேன். சகுந்தலையும் சுதந்திரமற்றவள் என்றுமறிவேன். ஆனாலும் அவளை மறக்கவோ முடியவில்லை. மனம் அவளிடமே செல்லுகின்றது. காமன் பூக்களை அம்பாகக் கொண்டவனென்றும், சந்திரன் தண்மை பொருந்திய ஒளியுள்ளவனென்றும் புகல்வது எம்போன்றவர்கள் விஷயத்தில் பொய்யே. சந்திரன் குளிர்ச்சியுள்ளடங்கிய வெப்பத்தையே வீசுகிறான். காமனுடைய பூவம்புகளும் வஜ்ராயுதம் போலக் கூராகவே இருக்கின்றன. மன்மதா! பரமசிவனுடைய நெற்றிக் கண் திறந்து உன்னை எரித்தபொழுது உன்னிடம் சேர்ந்த அந்த அக்கினி இன்னும் ஜ்வலித்துக்கொண்டே இருக்கின்றது போலும். இல்லாவிட்டால் உன்னால் இவ்வளவு கொதிப்பு உண்டாகுமா" என்று துஷ்யந்தன் நினைத்து வருந்தினான்.

தவகுஸும சரத்வம் சீத ரச்மித்வ மிந்தோ:
த்வய மித மயதார்த்தம் த்ருச்யதே மத்விதேஷு |
விஸ்ருஜதி ஹிமகர்ப்பை: அக்நிமிந்துர் மயூகை:
த்வமபி குஸும பாணாந் வஜ்ரஸாரீகரோஷி |
அத்யாபிநூநம் ஹர கோபவஹ்நி: த்வயிஜ்வலத்
யௌர்வ இவாம் புராசௌ |

அவன் சகுந்தலையைத் தேடிச் சென்றபொழுது ஒரு மலைக் கல்லில் பூங்கொத்துக்கள் நிறைந்த இடத்தில் சகுந்தலைப் படுத்துக்கொண்டு அவளுடைய இரு தோழிகளால் தாமரை யிலைகளால் விசிரப்படுவதைக் கண்டான். அவர்களால் வற்புறுத்தப்பட்ட பொழுது அவள் அரசனிடம் தான்கொண்ட காதலை வெளியிட்டாள். அரசன் "எந்தக் காமன் வெப்பத்தை உண்டாக்கினானோ அவனே வெப்பத்தைத் தணிக்கின்றான். சில மேகங்களிலிருந்து வெய்யிலுடன் கூடிய பகலே மாலையில் முகிலாய் வெப்பத்தைத் தணிப்பது போலிருக்கின்றது" என்று நினைத்து மகிழ்ந்தான்

# 'மகிழ்ச்சியின் உருவம்.'

மதிப்புக்குரிய ஸ்ரீமதி வை. மு. கோ. அவர்களுக்கு,

வணக்கம். கடந்த இரண்டு மூன்று மாதங்களாக தங்களுடன் தினந்தோறும் பேசிப்பழகும் பேறு கிடைத்தது பற்றி எங்களுக்கு உண்டான மகிழ்ச்சியின் உருவமே இந்தக் கடிதம். கதையுலகில் பல்லாண்டுகளாக சஞ்சரித்துத் தங்களுக்கென ஒரு தனி இடம் பெற்றிருக்கும் தங்களை கதைகளின் வாயிலாக நாங்கள் அறிந்திருந்தது கொஞ்சமே. ஆனால், இந்த மூன்று மாதங்களில் நேரில் பழகின பின், தங்களை மிக நன்ருக அறிந்து கொண்டுள்ளோம்.

நாவல் அரசி, கதை ராணி என்றெல்லாம் புகழ் பெற்றிருக்கிறீர்கள். கதைகளும் நாவல்களும் எழுதுவோர் எத்தனையோ பேர் உள்ளனர்; ஆனால், தங்கள் கதைகளில் காணும் கற்பனை யழகு மிகமிக அரிதாகவே மற்றவர் எழுத்தில் காணப்படுகிறது. ஒன்ரு, இரண்டா? நூற்றுக்கு மேற்பட்ட நவீனங்கள்! ஒவ்வொன்றில் ஒவ்வொரு கருத்து; ஒவ்வொன்றிலும் வெவ்வேருன கற்பனைகள்! இவற்றுக்கெல்லாம் மேலாக, கதைக்காகவே கதை எழுதாமல், ஒரு கருத்தை உணர்த்தவே கதை எழுதுகிறீர்கள் தாங்கள். மக்கட் சமுதாயம் எப்பாடு பட்டாகிலும் முன்னேருதா என்ற ஏக்கம் தங்கள் நெஞ்சில் குடிபெற்றுள்ளது; அந்த ஏக்கத்தின் பெருமூச்சை தங்கள் கதைகளில் பக்கத்துக்குப் பக்கம், வரிக்கு வரி உணர முடிகிறது.

சமூக வாழ்க்கையின் பலபுறங்களிலும் தங்கள் தீட்சண்யமான பார்வை விழுந்திருக்கிறது; ஆங்காங்கு தாங்கள் கண்ட சிறப்பான அம்சங்களை ஊக்கி உற்சாகப்படுத்தியும், அவலங்களைத் தயவுதாட்சண்யமின்றிக் கண்டித்தும் வருவதிலிருந்து சமுதாயம் நல்வழிப்படவேண்டும் என்பதில் தங்களுக்குள்ள ஆர்வம் வெளியாகிறது. கண்டிக்கும்போது உபயோகப்படுத்தும் ஆவேச வார்த்தைகளே இதற்குச் சான்று. சமூகத்தின் குறைகளைத் தம் சொந்தக் குறைகளாகவே பாவிக்கும் பண்பு உடையவரால்தான் அப்படி எழுத முடியும், பேசமுடியும்!

குறிப்பாக, தெய்வ நம்பிக்கையை மக்கள் மனத்தில் உண்டாக்க அரும்பாடு படுகிறீர்கள். "ஒரு நல்ல பொருளைக் கண்டால் அதைச் செய்தவனையே புகழ்கிருேம்; அதுபோல் இந்தக் கரைகாணுத கடலையும், கரைகாணுத உலகையும், கரைகாணுத வானத்தையும் படைத்தவனின் சக்தியை எண்ணிப் பார்க்க வேண்டாமா?" என்று 'பாதாஞ்சலி'யில் கூறுகிறீர்கள். அது உள்ளத்தைத் தொடுவதாக இருக்கிறது. தெய்வ நம்பிக்கை இல்லாமலும், பொருள் உள்ள பழைய முறைகளில் சிரத்தை இல்லாமலும் இருக்கிறது இன்றையபாரத சமுதாயம். அவைகளுக்குப் பதிலாக வேறு ஏதேனும் சக்திவாய்ந்த முறைகளோ கோட்பாடுகளோ இன்னும் கிடைத்தபாடில்லை. இந்த நிலை நீடிக்குமானல், எதிர்காலம் பயங்கரமானதாகும். இதை எண்ணியே, ராஜாஜி போன்ற தலைவர்களும் சங்கராச்சாரியார் போன்ற மகான்களும் கடவுள் பக்தி குறித்து இடைவிடாது உபதேசித்து வருகிருர்கள். இதே தொண்டைத் தாங்கள் கதைகள் மூலம் செய்கிறீர்கள்.

(இவ்விடத்தில், தெய்வ வழிபாடு சம்பந்தப்பட்ட வரையில் எங்கள் கருத்து சற்று மாறுபட்டது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்: நம்மைப் படைத்து எல்லோரையும் எல்லா வற்றையும் இயங்க வைக்கும் மகத்தான சக்தியை, கடவுளை நாம் மறக்கலாகாது தான்; தினமும் போற்றித் துதிக்க வேண்டும், ஆனால், அதே சமயம் அது உண்மையான தியான மாக இருக்க வேண்டும். மனத்தைச் சில விநாடிகளேனும் ஒரே நிலையில் இருத்தி நம் வேண்டுகோளை விடுத்தலே உண்மையான தியானம்; இதற்கு மேலாக, முடிந்த வரையில் நம் இதயம் தூய்மையாக இருக்க வேண்டும்; உள்ளம் பொய்மையற்று இருக்கவேண்டும். அப்படி ஒரே நிலையில் மனத்தை இருத்தி ஒரே நினைவாக மானஸீகமாக பிரார்த்தனை புரியும் சாதனை பெற்ற வருக்குப் புறச்சின்னங்கள் தேவையில்லை. அதுமட்டுமல்ல; எவ்வளவுதான் பூஜைகள் செய்தாலும் மனத்தூய்மை இல்லாத வரும், மனக்கட்டுப்பாடு இல்லாதவரும் தெய்வத்தின் அருளுக் குப் பாத்திரராக முடியாது.)

'வாளைவிட வலிமை மிக்கது பேனு' என்று சொல்லு வார்கள்; அதை மெய்ப்பிக்கும் வகையில் எத்தனையோ இலக் கியங்கள் எழுந்துள்ளன. அவற்றில் தங்களது எழுத்துக்கும் நிச்சயம் ஸ்தானம உண்டு. ஏனெனில், எந்த ஒரு தீச்செயல் புரி பவரும் தங்கள் நவினங்களைப் படித்த பிறகு மீண்டும் அக்காரி யத்தில் இறங்கத் தயங்குவர். அதுவே எழுத்தின் லட்சணம், லட்சியம். எழுதுவதில் பலவகை உண்டு. உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை எழுத்தில் வடிக்கும்போது சற்றே மெருகிட்டு வடிப்பது ஒன்று; இதில் உணர்ச்சியின் வேகம் குன்றுமல் எழுது வது ஒரு வகை; குன்றி எழுதுவது ஒருவகை. தங்கள் எழுத் திலோ, மெருகைப் பற்றிக் கவலைப்படாமல் உணர்ச்சியையே பிரதானமாகக் கொள்ளும் சிறப்பு காணப்படுகிறது. ஒரு தனி வழி வகுத்துக்கொண்டு எழுதும்முறைக்கு அன்னாரின்பெயரையே சூட்டுவது மேனுட்டு வழக்கம்; அதுபோல் உள்ளத்து உணர்ச்சி களை அப்படியே கொட்டி எழுதும் முறைக்குக் "**கோதை-ஸ்டைல்**" என்று பெயரிடலாம்!

தாங்கள் இதுவரை செய்த சேவைகளுக்கும் அதிகமாக இன்னும் பல சேவைகள் புரிய நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும், மனச்சமாதானமும் அருளுமாறு ஆண்டவனை வேண்டுகிறோம்.

தங்கள்,

ஷாம்நகர், 17—9—'58.

அம்புஜா,
பி. எஸ். நாராயணஸ்வாமி.

## வந்தனம்

அன்பு மிக்க அம்புஜம் தம்பதிகளுக்கு நமஸ்காரம். உபய குசலம். கடவுள் க்ருபையால் எங்களுடைய புதிய இல்வாழ்க்கை நான்குமாத காலங்களை கல்கத்தா (ஷாம் நகரில்) நடத்த பாக்கியம் கிடைத்து, தற்போது பெங்களூரில் வசிக்கும் பேறு பெற்று இருக்கிறோம். 'சர்க்கரை பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போல்' புதிய வாழ்க்கையில் மதராஸீ சிநேகிதைகளுடைய

அளப்பரிய அன்பும் எங்களுக்கு கிடைத்ததானது என்றும் மறக்க முடியாத மகிழ்ச்சியாகும்.

தொழில் முறையில் நேசம் வளர்ந்து தனிச்சிறப்பு பெறுவது ஒரு இலக்கணம். என்னுடைய பாட்டியின் புண்பட்ட நெஞ்சத்திற்கு பண்பட்ட மதருஸி சிநேகிதைகளின் அன்பு—அதிலும் சிறந்த எழுத்தாளராகிய தங்கள் கரைகடந்த ப்ரேமையும் அவர் மனத்திற்கு சாந்தியாக இருந்ததை நேரில் கண்டு பூரித்தேன். அத்தகைய சகோதரி (தம்பதிகள்) தங்களுடைய இதயக் கடலில் கொந்தளித்தெழும் அன்பு அலைகளை அப்படியே எழுத்தின் மூலம் பாராட்டு பத்திரம் என் பாட்டிக்கு வழங்கி இருப்பதற்கு பாட்டியின் சார்பாகவும், எங்களுடைய சொந்த ஹோதாவிலும் மனமார்ந்த வந்தனத்தை தம்பதிகளுக்குச் செலுத்துகிறோம்.

சூரியன் எத்தனையோ காதத்திற்கு அப்பால் இருந்தாலும் தடாகத்திலுள்ள தாமரை மலர்ந்து குலுங்குவதுபோல் ஆயிரம் மயிலுக்கப்பால் இருந்தாலும் நம்முடைய சினேகம் என்றும் புது மணம் வீசி திகழ ஆண்டவன் அருள்புரிய வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

29—9—'58.] விஜயலக்ஷ்மி வரதராஜன்

---

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்மர ஏவ தாபஹேதுர் நிர்வாபயித்வா ஸ ஏவமே ஜாத: |
திவஸ இவார்த்த ச்யாம ஸ்தபாத்யயே ஜீவலோகஸ்ய ||

தோழிகள் சகுந்தலையை அரசனுக்கு ஒரு கடிதம் எழுதத் தூண்டவே அவளும் தாமரை இலையில் தன்னுடைய நகத்தால் எழுத ஆரம்பித்தாள். அவள் அப்பொழுதிருந்த நிலையைப் பார்த்து அரசன் ஒரு புருவத்தை உயர்த்தி நெறித்து ஆலோசித்து "இவன் எழுதும்பொழுது இவளுடைய கன்னம் மகிழ்ச்சியால் புளகித்தமானது இவளுக்கு என்மீதுள்ள மெய்யன்பை விளக்குகின்றது" என்று அறிந்துகொண்டான்.

உந்நமிதைக ப்ரூலதமநந மாஸ்யா: பதாநி ரசயந்த்யா: |
கண்ட கிதேந ப்ரதயதி மய்யநு ராகம் கபோலேந ||

சகுந்தலை அத்தாமரையிலையில் "உன் மனத்தை நான் அறியவில்லை. ஆனாலும் என் அங்கங்களை மன்மதன் பகலிலும் இரவிலும் கருணையின்றி வருத்துகிறான்" என்று எழுதினாள்.

துஜ்ஜண ஆணே ஹிஅஅம் மமஉண மசுணோ திவாவி
ரத்திம் வி |
ணிங்கண தவஇ வலீயம் துஇ ஜுதமணோரஹும்
ஹிஅஅம் ||

உடனே அரசன் தாமதியாமல்முன்வந்தபொழுது தோழிகள் இருவரும் அவனுக்கு உபசார மொழிகளை கூறினார்கள். அவன் "கடலை யாடையாத உடுத்த பூமியும் உங்கள் தோழியும் தான் என் குலத்தை நிலைநிறுத்தப்பட்டவர்கள்" என்று வாக்களித்தான். பிறகு ஈசன் சாட்சியாக அரசன் சகுந்தலையை காந்தர்வமணஞ் செய்துகொண்டான்.

# கைராசிக்காரி

— விஜயலக்ஷ்மி வரதராஜன் —

"வெத்தலைம்மா.....வெத்தலை...கும்பகோணம் வெத்தலை...ரவேசு வெத்தலை" என்ற ஒரு பெண்ணின் குரல் கணீர் என்று ஒலித்ததுதான் தாமதம். அத்தெருவில் அனைவர் வீட்டிலிருந்தும் தலைகள் நீண்டு நோக்கும்.

"கிழவி....கிழவி....வெத்தலைக்காரி வந்துவிட்டாள்" என்று குழந்தைகளின் சிரிப்போடு கூடிய கைத்தட்டல் ஒலியும், "கமலா....பத்மா....ராஜீ...வெத்தலைக்காரிடி" என்று வீட்டிலுள்ள குடித்தனக்காரர் அனைவருக்கும் முன் கட்டு சொந்தக்காரி அறிவிக்கும் கூவலும் தொடர்ந்து எழும்.

"எங்கள் வீட்டுக்கு வாடி முதலில்..." என்ற போட்டிக்கிடையே எங்கு செல்வது...என்று அறியாது விழிப்பாள் அக் கிழவி.

எல்லோர் வீட்டிலும் வியாபாரத்தை முடித்துக் கொண்டு அவள் வரும்வரை போட்டியிடாமல் மௌனத்துடன் காத்திருந்து, இன்முகத்துடன் வரவேற்பவள் சுசீலாதான்.

வெற்றிலைக்காரி. அதுவும் ஏழைக் கிழவி. இவள் வரவிற்காக ஏன் அனைவரும் காத்திருக்க வேண்டும்? போட்டியிட வேண்டும். மகிழ்ச்சியடைய வேண்டும்? என்ற கேள்விகள் எழுவது சகஜம். அவள் கொண்டு வரும் சிறந்த, ருசிமிகுந்த வெற்றிலைக்காக மட்டும் அவளை வரவேற்கிறார்களா? அல்லது நெற்றியில் பூசிய மஞ்சளினிடையே துலங்கும் அகலமான குங்குமப் பொட்டும், குலுங்கும் வளையலும், ஓசையிடும் மெட்டியும், தூக்கி சொருகிய கொண்டையும், எப்போதும் சிரித்து நிற்கும் முகமும் உடையவள் என்று வரவேற்கிறார்களா? அதுவும் ஒரு காரணமாக இருந்தாலும், அவள் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு முக்கியமான மனுஷியாக விளங்குவதே காரணம்.

அவள் வியாபாரம் செய்வது ஐந்து நிமிஷந்தான். ஆனால் வீட்டிலிருப்பவர்களோடு பேசிக் கொண்டிருப்பது இருபத்தைந்து நிமிஷமாக இருக்கும்.

வயது முதிர முதிர அனுபவமும் அதைப்போல் பன்மடங்கு பெருகி வளர்வது இயல்பு. எல்லோருக்கும் அந்த திறமை ஏற்படுவது அரிது. தாம் அறிந்த விஷயங்களை உலகோருக்குக் கூறி நன்மை பயக்கும் விதம் செய்வது என்ற குணம் ஒரு அலாதியான உத்தம குணம். அவ்விதம், தான் வளர்ந்த இந்த எழு

பது வருடங்களில் தான் அனுபவித்து கண்ட வழியும், நேரில் பார்த்து தெரிந்து கொண்ட செயலும், காதால் கேட்டறிந்து பரிக்ஷை செய்த முறைகளையும், தொன்று தொட்டு வரும் வழக்கங்களையும் பல சமயத்தில் பலருக்குக் கூறி உதவிபுரிந்து மகிழ்ச்சியடைவது வெற்றிலைக்காரக் கிழவி மங்களத்தின் சிறந்த பொழுதுபோக்கு.

ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகள் இருப்பதும், அதன் உடம்பிற்கு அசௌக்கியம் ஏற்படுவதும் இயற்கை. அப்படி ஏற்பட்டால் வெற்றிலைக்காரி மங்களத்தின் நினைவுதான் முதலில் அனைவர் மனதிலும் தோன்றும். பிறகுதான் வைத்தியரின் ஞாபகம் வரும். இன்று ஏன் மங்களம் இன்னும் வரவில்லை என்று வாயிலில் நின்று அவர்கள் காத்திருப்பது வழக்கமாகிவிட்டது.

அவள் வந்ததும் வராதது மாக "பாட்டி! குழந்தைக்கு நேற்றையிலிருந்து ஒரே ஜலதோஷம். தொண்டையைக் கட்டிக்கொண்டு பேசவும் முடியாது, மூச்சும் விட முடியாது திணறுகிறது. ஜுரம் வேறு காய்கிறது, பயமாய் இருக்கிறது" என்று வரிசையாக ஒப்பிப்பார்கள்.

கிழவி லேசாக சிரித்துவிட்டு, "ஏம்மா கொயந்தே! இதுக்கெல்லாம் பயப்படுறே. கொயந்தெயெங்கெ கொண்டுவா. அப்புறம் நான் சொல்றதை யெல்லாம் போட்டு கஷாயம் காய்ச்சி கொடு. பத்து நிமிஷத்திலே பஞ்சாய்ப் பறந்துடும் நோவு" என்று தைரியம் கூறி தன் எதிரிலேயே மருந்தையும் தயாரிக்கச் செய்து தானே குழந்தையைச் சாப்பிடச் செய்து விடுவாள்.

அவள் கூறியது போல் குழந்தை மறுநாள் நன்றாக விளையாடத் தொடங்கி விடும். ஒவ்வொரு வீடாக இந்த செய்தி அறிந்து அனைவரும் மங்களத்தின் உதவியை நாடி, அவள் வழியைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். தாங்களே மருந்து தயாரித்து வைத்திருந்தாலும் வேறு டாக்டரிடமிருந்து வாங்கி வந்திருந்தாலும், மங்களம் வந்து அவள் கையால் கொடுத்தால்தான் குழந்தையின் உடல்நிலை விரைவில் குணமாகும் என்ற நம்பிக்கை அனைவர் மனதிலும் வேரூன்றும் அளவிற்கு கைராசிக்காரியாக அவள் விளங்கினாள். இப்படி ஒவ்வொருவரும் எதிர் பார்ப்பதால், வியாபாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தினந்தோறும் எல்லா வீடுகளுக்கும் செல்வது ஒரு கடமையாயிற்று.

சுசீலா குழந்தைகள் சகிதம் வாயிலில் உட்கார்ந்

திருப்பாள். மங்களமும் "அப்பாடா" என்று கூடையை வைத்துவிட்டு அவர்கள் அருகில் அமருவாள்.

"மங்களம்! எங்கள் வீடு கடைசியாக இருப்பதில் எவ்வளவு நல்லதாக இருக்கிறது. உன்னோடு எத்தனை மணி நேரமாவது பேசலாம். 'இங்குவா, அங்குவா' என்று போட்டியும் கிடையாது. உன்னோடு பேசுவது ஒரு பொழுது போக்காக இருப்பதோடு, எத்தனை அனுபவம் ஏற்படுகிறது" என்று தன் மகிழ்ச்சியைக் கூறுவாள்.

குழந்தைகளது உடம்பை சுசீலா கூறவோ, மங்களம் கேட்கவோ அந்த குழந்தைகள் இடம் வைப்பதில்லை. வரிசையாக தாங்களே கூறி வைத்தியமும் கேட்டு வைத்துக் கொள்வர்.

நோய்க்கு வைத்தியம் சொல்வது மட்டும் மங்களத்தின் வேலையல்ல. அவ்வூரில் நடக்கும் சந்தோஷ சமாசாரங்கள், வைபவ கோலாகலங்கள், அதிசய சம்பவங்கள், ஆபத்தான செய்திகள் எல்லாவற்றையும் கூறுவாள். பெண்மணிகள் அவளைத் தாயாகக் கருதினர் என்றால் மிகையல்ல. தங்கள் குடும்ப விஷயங்கள், சச்சரவுகள், மனத் தாங்கல்களைக்கூட அவளிடம் ஆறுதல் பெறுவர் குடும்ப ஸ்திரீகள். ஒருவர் வீட்டு விஷயத்தை ஒருவரிடம் முடிபோடும் கலக நெஞ்சம் இல்லாது தூய்மையான மனம் படைத்தவள் என்பதே அவளிடம் அனைவரும் சுதந்திரமாகப் பழகுவதற்குக் காரணம்.

எல்லோரைக் காட்டிலும் சுசீலா மங்களத்தை மனிதத் தெய்வமாகவே கருதினாள். அவள் எவ்வளவு அபிமானம் மங்களத்தின் மீது கொண்டிருக்கிறாளோ, அவ்வளக்கவ்வளவு வெறுப்புத் தான் கொண்டிருந்தான் அவள் கணவன் ராமன். சுசீலாவை அவ்வப்போது கண்டித்தும் வந்தான். அது அவள் மனத்திற்கு வருத்தத்தையே அளித்தது.

அன்று சனிக்கிழமை.

வெற்றிலைக்காரியோடு ஆனந்தமாகப் பேசிக் கொண்டு குழந்தைகள் புடைசூழ அமர்ந்திருந்தாள்.

"மங்களம்! அந்த ஆலமரத்தடி கேஸ் என்னவாயிற்றும்?" என்று கேட்டாள் சுசீ.

"அது இந்தக்காலத்திலே முடியுமாம்மா? அந்தப் பெண்ணு என்னவோ இறந்துபோச்சு. அந்த மாமியாரும், நாத்தியும் இன்னும் அதுங்க ஆட்டத்தை நிறுத்தலே. பிள்ளை ஜெயில்லே கம்பி எண்ணுறான். கேஸை தள்ளிப் போட்டுக்கிணே போறாங்க" என்று கூறிக் கொண்டிருக்கும்

போது சுசியின் இரண்டாவது மகன் பலமாக இருமத் தொடங்கினன்.

"மங்களம்' இது இருக்கட்டும். இந்த இருமல் மருந்து செய்யும்விதம் சொன்னயே, மறந்துட்டேன். இப்போது சொல் எழுதி வைத்துக் கொள்கிறேன்" என்றவள் நோட்டுப் புத்தகத்தையும் பேனவையும் வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

வெற்றிலைக்காரி கூறிக் கொண்டே வர, சுசி எழுதியவாறிருந்தாள். அப்போது பூட்ஸ் ஒலி கேட்டது. தொடர்ந்து அவள் செல்வங்கள் "அப்பா! அப்பா வந்து விட்டார்" என்று கூறியவாறு எதிர்கொண்டழைக்க குதித்தோடினர்.

ராமனும் குழந்தைகளோடு உள்ளே நுழைந்தான். அங்கு வெற்றிலைக்காரியோடு அமர்ந்திருப்பது கண்டு ஆத்திரம் சீறிப்பொங்கியது. டபால் டபாரென்று பூட்ஸை தரையில் உதைத்து ஓசைப் படுத்தியதோடு, சுசீலாவையும், அக்கிழவியையும் உஷ்ணத்தோடு ஒரு முறை முறைத்தவாறு உள்ளே சென்ருன். அதை சுசீலா கவனிக்க வில்லை. ஆனல் மங்களம் நொடியில் அறிந்து கிளம்ப எத்தனித்தாள்.

"ஏன் மங்களம் எழுந்து விட்டாய்? முழுவதையும் சொல்லி விட்டுத்தான் போயேன்" என்று சுசி தடுத்தாள்.

இவள் வார்த்தை முடியுமுன் "ஏய் சுசீ!" என்றபயங்கர உறுமல் உள்ளிருந்து வெடித்து வெளி வந்தது. கிழவி பயந்துகொண்டு ஓடி விட்டாள்.

சுசீலா எப்போதும்போல் சாந்தமாக வந்து "என்ன?" என்ருள். ராமன் அறையின் மறுகோடியிலிருந்து ஓடிவந்து சுசியின் கையிலிருந்த புத்தகத்தைப் பேய் வேகத்தில் பிடுங்கி சுக்கல் நாருகக் கிழித் தெரிந்தான்.

"சுசீ! என்ன என்ரு கேட்கிருய்? என்ன திமிர் உனக்கு. நான் களைத்துப் போய் வந்திருக்கிறேன். அதைக்கூடக் கவனிக்காமல், அந்தக் கிழட்டுப்பிணத்தோடு அப்படி என்ன அரட்டை? எத்தனை தடவை உன்னைக் கண்டித்திருக்கிறேன்" என்று மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கக் கத்தினன்.

"......" சுசீ பதிலளிக்கவில்லை.

"என்ன வாயடைத்து நிற்கிருய். மதிப்பு, மரியாதை என்ற ஒன்றும் கிடையாது. கண்ட தெருவில் திரியும் பொறுக்கிகளுக்கு சம ஆசனம் கொடுத்து வீட்டினுள் அழைத்து வாயாடுவது. அவள் சொக்குப்பொடியில் மயங்குவது மருந்து சொல்கிருளாம். மாற்றுக் கொடுக்கிருளாம். அதையெல்லாம் கிறுக்கிவைத்துக் கொண்டு, குழந்தைகள் உடம்பைக் கெடுத்து ஏமாறுவது. நீயே

அறியாதபடி வீட்டைக் கொள்ளையடித்து மோசம் செய்யும் திருட்டுக் கழுதைகள் இவர்கள் என்று உனக்குத் தெரியவில்லையே"-கோபம் தீர ராமன் கொட்டிக் கொண்டே போனன்.

"ஏன் இப்படி ஆத்திரப்படுகிறீர்கள்? என்ன தவறு நடந்துவிட்டது. அவள் அப்படிக் கேவலமான மனுஷியல்ல: நம் குழந்தைகள் மீது உயிரையே வைத்திருக்கிருள். அவள் சொல்லும் ஒவ்வொரு மருந்தும்..."

"ஹாம்...ஒவ்வொரு மருந்தும் அமிர்தம். சிரஞ்சீவி மருந்து இல்லையா....?"

"கட்டாயம் அவள் மருந்து குழந்தைகள் உடம்பிற்கு நன்ருக ஒத்துக் கொண்டிருக்கிறது." "வியாதிதான் அதிகமாக ஒட்டிக் கொள்ளும். சீ...சீ....வாயை மூடு. ஒழிந்து போங்கள் எல்லோரும் என் எதிரில் நிற்க வேண்டாம்" என இரைந்து விட்டு முகத்தை மூடிக் கொண்டான்.

இரண்டு நாள் கழித்து ராமன் காரியாலயத்திலிருந்து திரும்பும்போது வீடு ஒரே நிசப்தமாக இருந்தது. 'எப்போதும் குழந்தைகள் இரைச்சலும், சண்டையும் தெருக்கோடிக்கு கேட்கும். இன்று என்ன?' என்ற கிலியும், சந்தேகமும் ராமனைக் கிள்ளியது. கூடத்தில்மூலைக்கொருவராக மௌன விரதத்தைக் கையாண்டு ஊமை சைகையில்ஷம்பாஷணையை நடத்திக் கொண்டிருந்தனர்.

"ஏண்டா! என்ன சமாச்சாரம். அம்மா எங்கே?" என்று கேட்ட ராமனை, "சூ! வாயை மூடப்பா. அம்பிக்கு உடம்பு சரியில்லே. சத்தம் போடாதே" என்று ஒரு மகன் வாயை அடக்கி விட்டான்.

உள்ளே அம்பி கட்டிலில் நினைவின்றி துவண்டு கிடந்தான். சுசீலா அருகில் அமர்ந்து கண்ணீர் உதிர்த்துக் கொண்டிருந்தாள்.

"சுசீ! அம்பிக்கு எப்படியிருக்கிறது உடம்பு" என்ருன். அவள் கண்ணீரைத்தான் பதிலாக அளித்தாள். குழந்தையின் ஸ்பரிசம் பட்ட ராமன் துள்ளினன். தணலைவிட தகித்தது அவன் உடல்.

"சுசீ! மருந்து கொடுத்தாயா...என்ன சுசீ?" என்று உலுக்கினன்.

அதற்குள் ஒரு பெண் "மருந்து எப்படிக் கொடுப்பாள். அந்த நோட்டுப் புத்தகத்தைத்தான் கிழித்துப் போட்டுவிட்டாயே. அதுவுமில்லாமல் அன்று நீ கோபத்தோடு கத்திய பிறகுவெற்றிலைக்காரி வரவேயில்லை.

"ஏய்! அதிகப்பிரசங்கி! நிறுத்து. வெற்றிலைக்காரி தான் பெரிய டாக்டரோ? சுசீ! வேறுடாக்டரிடம் காட்டுவதுதானே?"

"எல்லாம் போய்ப்பார்த்தாயிற்று. இந்த பாழாய்ப்

போன குக்கிராமத்தில் இருந்த இந்த ஒரு டாக்டரும் எங்கோ ஊருக்குத் தொலைந்துவிட்டானும். மங்களமும் வரவில்லை. என் குழந்தையை இப்படியே தான் பறிகொடுத்து விடுவேனோ" என்று பெரியதாக விம்மத் தொடங்கிவிட்டாள்.

கூண்டு புலியாய் குறுக்கும்நெடுக்கும் அலைந்தான்.

"அப்பா! மங்களம் மருந்து கொடுத்தால்தான் அம்பிக்கு ஜுரம் சரியாகுமப்பா. கோபிக்காதே. நான்போய் எங்காவது தேடிப்பிடித்து அழைத்து வருகிறேன்" என்றான் தைரியத்துடன் ஒரு பையன்.

சுசீலாவும் சிறிது நம்பிக்கையுடன் "ஏன் பேசாமல் உலாத்துகிறீர்கள்? அந்த டாக்டர் எப்போது வருவானோ! மங்களம் வசிக்கும் தெருவின் பெயர் எனக்குத் தெரியும். கடைசியாக அங்கே போய் பார்த்துவிடலாம். உங்கள் மதிப்பையும் பிடிவாதத்தையும் விடுங்கள்" என்றாள்.

ராமன் பேசவில்லை. சிந்தித்துக் கொண்டேயிருந்தான்.

"நீங்கள் வருகிறீர்களா? அல்லது நானே குழந்தையை எடுத்துக்கொண்டு போகட்டுமா...? பாப்பா! வண்டியைக் கூப்பிடு" என்று உத்திரவிட்டாள்.

"இல்லை சுசி! நானும் வருகிறேன்" என்று குழந்தையைத் தானே தூக்கிக்கொண்டு அவள் பின் நடந்தான்.

மேட்டுத் தெரு முனையில் செல்லும்போது அந்தத் தெருவில் தாரையும் தப்பட்டையும், உடுக்கையுமாக ஓசை கேட்டது. சுசீலாவுக்குப் புரியவில்லை. பூச்சொரிந்த ஒரு பெரிய பல்லாக்கு அவர்களை நெருங்கி வந்துகொண்டேயிருந்தது.

"என்னதுப்பா! ஓசை கேட்கிறது. பல்லாக்கு வருகிறது" என்றாள்.

"அதையேம்மா கேட்கிறே! மகாலக்ஷ்மியாட்டமா ஒரு கிழவி வெத்தலை விக்குங்களே. அது போயிட்டுதுங்க. மஞ்சளும், பூவும் ஒசாறிஞ்சிகிட்டு அதன் சவம் வருதுங்க" என்றான்.

"யாரு? மங்களமா!"

"ஆமாங்க" என்றான்.

"ஐயோ! மங்களம்" என்று வீறிட்டாள் சுசீலா. "உன்னைக் காணவந்த நான் உன் சவஊர்வலத்தையல்லவா காண நேரிட்டது" என்று கூவினாள்.

கண் முழிக்காதிருந்த குழந்தை "என்னம்மா ஓசை" என்று கேட்டது.

ராமனது உடல் அதிர்ச்சியால் சிலிர்த்தது. வெற்றிலைக்காரியை வெறுத்து ஒதுக்கித் தள்ளிய அவன் உள்ளம் "சுமங்கலித் தாயே! நீதான் என் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டும். என்னை மன்னித்துக்கொள்" என்று தன்னையறியாமல் வேண்டியது. ✻

தெளிவுபெற்ற ராமன் காதை தீட்டியவாறு சம்பாஷணையை கேட்கலானுன்.

பாட்டி: சதாசிவம்! வெளியே போகிருயா? உன்னிடம் தனிமையில் ஒரு விஷயம் பேச வெகுநாளாய்க் காத்திருக்கிறேன். சற்று உட்காரப்பா"....

சதா: என்னம்மா இத்தனை பீடிகைபோடுகிருய். எந்த சமயம் நீ கூப்பிட்டால் நான் காத்துக்கொண்டிருக்க மாட்டேனும்மா...என்ன விஷயம்! ஊருக்குப் போக வேண்டுமா...

பாட்டி: அதுவும்தான் நடக்கவேண்டும். முதலில் நம் கண்மணி ஸேதுராமனுக்குக் கல்யாணத்தைச் செய்து கண்ணுல் பார்க்க வேண்டுமென்கிற ஆசை பூர்ணமாக வந்துவிட்டது. அதோடு நான் இனி அதிகநாள் இருக்கமாட்டேன். அதற்குள் இந்த சுபகாரியத்தை முடித்துவிட வேண்டும்.''

''அடேயப்பா! என்னவோ ஏதோ என்று பார்த்தேன். இதைப்பற்றி நானும்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். உன்னிஷ்டப்படியே செய்துவிடலாம். பெண்ணும் தயாராக இருக்கிருள்.

பாட்டி: (பரபரப்புடன்) பெண் தயாராக இருக்கிருளா! யாரப்பா அது? எனக்குத் தெரியாமல் தயாராகிவிட்டவள். கதைகளில் வருவதுபோல காதல் கீதல் என்று ஏதாவது!...

சதா: சேச்சே! அதொன்றுமில்லையம்மா.. நம்ம பையன் அத்தகைய போக்கிரியல்ல. மிகவும் அடக்கமும் கண்ணியமும் வாய்ந்தவன் என்பது உனக்குத் தெரியாதா? என் சிநேகிதர் வெங்கட்ரத்தினத்தின் பெண் வெகு அழகாய் சகலவித அம்சங்களும் பொருந்தி இருக்கிருள். அவளை....

பாட்டி: இதோபார் சிவம்! அதற்காகத்தான் நான் பேச ஆரம்பித்தேன். வெளியில் ஏதாவது ஏற்பாடு செய்துவிடப் போகிருயே என்ற பயம் எனக்கு உள்ளூர உண்டு. பல வருஷங்களுக்கு முன்பே நம் ராமையாவுக்கு நான் வாக்குக் கொடுத்துவிட்டேன்....

சதா: என்னம்மா....நீ சொல்வது புரியவில்லை. ராமையாவுக்கு நீ பலவருஷங்களுக்கு முன்பு வாக்குக்கொடுக்க அவனுக்கு அப்போது அத்தனை பெரிய பெண் ஏதம்மா?...

பாட்டி: இருப்பா! அவஸரப்பட்டுக் குறுக்கே பாயாதே. நம் ஸேதுராமனுடைய உயிருக்கே பேராபத்துக்கள் வந்த சமயம் நாம் கலங்கித் தவித்ததும் நீ மறந்திருக்க மாட்டாய். நம் க்ராமத்திற்குள்ளேயே செல்வத்தில் நம்ம

வீடும், முரட்டுத்தனம், அதிகாரம், துடுக்கு இவைகளில் ராமய்யா வீடும் தலைமுறை தலைமுறையாய்ப் பெயர் போனது. இது உனக்குத் தெரியுமோ தெரியாதோ. ராமய்யா வீட்டவர்களை யார் விரோதித்துக் கொண்டாலும் பேராபத்து வருவது நிச்சயம். அவனிடம் நேசமாகவே இருப்பவர்களுக்கு என்றுமே பயமில்லை. வரக்கூடிய விபத்தையும் வெகு சுலபமாகத் தடுத்துவிடுவான். இந்த ரகஸியத்தை நானும் உன் பிதாவும் அறிந்துதான் ராமய்யாவின் வீட்டாருடன் என்றுமே பகைமை கொள்ளாது நட்பே கொண்டுவருகிறோம். ராமய்யாவின் மூத்த மனைவிக்குக் குழந்தையே பிறக்காததால் அவன் மறு விவாகம் செய்துகொண்டான். அதுதான் உனக்குத் தெரியுமே.

நம் ஸேதுராமன் விஷயத்தில் அவன் தலையிடாதிருந்தால் இன்று நாம் இன்னிலையில் இருக்கவே முடியாது. குழந்தையைக் கொல்வதற்குக்கூட பாவிகள் துணிந்தார்களாம் நம் பங்காளிக் கூட்டத்தில் சிலர். அதைக் கண்டு பிடித்து அத்தகைய ஆபத்துக்களை அவன் தீர்த்துவைத்த போது நான் சந்தோஷப் பட்டு அவனிடம் "உனக்குப் பெண் பிறந்தால் எங்க ஸேதுராமனுக்கே கல்யாணம் செய்துகொள்கறேன். அவன் உயிரை நீ காப்பாற்றி முருகக் கடவுளின் ப்ரஸாதமாக என்றென்றும் ஆபத்தில்லாமல் வைக்கவேண்டும். நீ செய்த பேருதவிக்கு இது தான் கைம்மாறு" என்று எனக்கு அப்போதிருந்த ஆவேசத்தில் சொல்லி வாக்குறுதி தந்துவிட்டேன். கடவுள் கிருபையால் பெண்ணும் பிறந்துவிட்டது. நாமும் ஊரை விட்டு வந்துவிட்டோம். அன்றுமுதல் இன்றுவரை நம்முடைய சகல விஷயங்களிலும் அக்கரைசெலுத்தி வெகு கனிகரமாகப் பாடுபட்டு நிலங்களையும் வ்ருத்தி செய்து வருகிறான். அவனுடைய விரோதத்தை நாம் பெற்றோமானல் பேராபத்தாகத்தான் முடியும்! தெரியுமா? உன் தாயார் என்பதனல் என் வாக்கை நீ பரிபாலனம் செய்ய வேண்டும்.

சென்ற வாரம் ராமய்யாவின் தூரத்து உறவு ஒருத்தி இங்கு யாத்திரை விஷயமாக வந்திருந்தாள். அவளிடம் ராமய்யா இது விஷயத்தைச் சொல்லியனுப்பியதோடு சீக்கிரம் முடித்துவிடவேண்டும் என்றும் கண்டிப்பாய்த் தெரிவித்தானும். அதனல் இனியும் தாமதம் செய்யக்கூடாது. சிவம்! என்ன இது? பலமான யோசனை செய்துகொண்டிருக்கிறயே! நான் சொல்வதைக் காதில் வாங்கிக்கொண்டாயா! அதுகூட இல்லையாப்பா? ஏதோ நம்முடைய வம்சமே இன்றுவரையில் தர்மத்திற்கும், சத்தியத்திற்கும் கட்டுப்பட்டு வந்துக்கொண்டிருக்கிறது. இந்தமரபில்உள்ள

வயதான கிழவி நான் ஒருத்திதான். உன் வயிற்றில் பிறக்காவிடினும் ஊரார் பிள்ளையாய் தெய்வப்ரஸாதமாய் நமக்குக் கிடைத்த குழந்தைக்கு நம் சத்தியவாக்கின்படி நடத்திவிட வேண்டும்....ஏன்? உன் தமக்கையின் பெண் ஒவ்வொருத்தியும் ரதியைப் போல அழகு வெள்ளமாய் இருக்கிறார்களே. அவர்களைப் பற்றி நான் சொன்னேனா? நான் குழந்தையின் பேரில் கரைகாணாது கொண்டிருந்த வாத்ஸல்யத்தினாலும் எப்படியாவது நம்முடைய வம்சம் விளங்கி ஒரு விளக்கேற்றி வைத்து அது சுடர்விளக்காய்—தூங்காவிளக்காய் ப்ரகாசிக்கவேண்டும் என்கிற பேராவலினால் நான் ராமய்யாவுக்கு இந்த வாக்கைக் கொடுத்துவிட்டேன். இன்றளவும் என் வார்த்தைக்குக் குறுக்கு சொல்லாதிருக்கும் நீ உன் தாயாரின் விருப்பத்தை நிறைவேற்றுவாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. தள்ளாத வயதில் என்னுடைய ஆசையைப் பூர்த்தி செய் என்று பாட்டி பெரிய உபன்யாஸம், கதை முதலியன செய்வதுபோல் மூச்சுகூட விடாமல் சொல்வதைக் கேட்கக் கேட்க ராமனுடைய சப்தநாடியும் அடங்கிப்போய் உடல் ஐஸ் கட்டியாய் சில்லிட்டு ரத்தமே உறைந்துவிட்டதால் நின்றவிடத்திலேயே துவண்டு விழுந்துவிடுவான்போலாகி விட்டான்.

இதுவரையில் வெகு உன்னிப்பாகவும் கவர்ச்சிகரமாயும் உம்கூட்டிக் கேட்டுக் கொண்டுவந்த இந்த கட்டம் ஒரு துள்ளு துள்ளச்செய்ததோடு "ஐயயோ! இதென்னபா கண்ராவிக் கதையாகி விடும்போலிருக்கிறதே. கிழட்டுப் பிணத்துக்கு ராமனின் பிதா என்ன பதில் சொன்னார்....பின் எப்படி ஸீதாலக்ஷ்மி கிடைத்தாள்".... என்று பதறியவாறு கேட்டாள் அகல்யா.

"அகல்யா! உன்னுடைய உள்ளத்தில் தற்சமயம் போராடும் போராட்டத்தின் எல்லையில்லாத் துடிதுடிப்பை நான் நன்கறிகிறேன். அதேபோல் பாஸ்கரனின் இதயம் படும் வேதனையும் அன்று ராமன் பட்ட பாட்டையும் ஒத்திட்டுப் பார்த்தால்....இப்போது இத்தனை வயதாகியுங்கூட மனது தவிக்கிறதம்மா! எத்தகைய சோதனையையும் வெகு ப்ரயாஸைப்பட்டு ஏதோ ஒருவாறு ஜெயித்தாலும் ஜெயிக்கலாமோ என்னவோ! ஆனால் இளங் காளைப் பருவத்தில் இதய பாதாளத்தில் அன்பு வ்ருக்ஷத்தை வளர்த்து அது பூத்துக் காய்த்துக் கனியாகும் சமயத்தில் வேறொருவன் கொத்தித் தின்றுவிடுவது என்கிற நிலை ஏற்படும்போது அதை ஜெயிப்பது என்பது வெகு கஷ்டம். அத்தகைய கண்டங்களில் நீந்தி ஜெயித்து வந்திருப்பதனால்தான் உன் விஷயத்தில் நான் உருகித் தவிக்கி

றேன்" என்பதற்குள், "மேலே சொல்லப்பா" என்று குறுக்கிட்டாள் அகல்யா.

ராமன் தன்னைத்தான் மெல்லச் சமாளித்துக் கொண்டு மீண்டும் அங்கேயே நின்றான். சில நிமிடங்களுக்குப் பிறகு ராமனின் பிதா ஒரு பெருமூச்சு விட்டவாறு "அம்மா! இதற்கு நான் என்ன பதில் சொல்வேன். என் மூளையே குழம்புகிறதே. தசரதன் கைகேயிக்கு வரங் கொடுத்துவிட்டதுபோல் அந்த ராமய்யாவுக்கு இத்தகைய வரனைக் கொடுத்துவிட்டாயேம்மா! நீ எந்த காலத்து மனுஷி. இப்போது நடக்கும் நாகரீக காலம் எங்கே? நீ வாக்குக்கொடுத்த காலம் எங்கே? ஒரு துஷ்டனுக்குப் பயப்பட்டு அவன் கேட்டதை எல்லாம் கொடுத்துக் கொடுத்து உறவாடுவது நன்மையா? அதுவே ஒரு அபாய மில்லையாம்மா! சாகும் வயதான பெற்ற தாயாருக்கு எதிர்த்து விரோதமாக நான் நடக்கமாட்டேன். இருப்பினும் நம் ராமனுக்கு இந்த விஷயம் மனத்திற்குப் பிடிக்க வேண்டாமா? அவன் என்ன முட்டாளா? எடுப்பார் கைக் குழந்தையா? மகா புத்திசாலி. யார் வயிற்றுப் பாக்கியச் செல்வமோ அவன் நமக்குக் கிடைத்திருக்கிறான். அவனுடைய மேதாவித்தனத்தைப் பற்றி காலேஜ் அறிவாளிகள் சொல்வதைக் கேட்கும்போது என் சரீரமே அமுதம் புசித்ததுபோன்ற ஆனந்தமுண்டாகிறது. அவனைச் சர்க்காரே வெளிநாட்டிற்கும் அனுப்பப் போவதாகக்கூட ஒரு வதந்தி இருக்கிறது. கடவுள் கிருபையினாலும் உன் ஆசியினாலும் அது நிறைவேற வேண்டும். அத்தகைய அறிவுக் களஞ்சியமான பையனுக்கு ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை நாம் ஏதோ வாக்குக்கொடுத்துவிட்ட பெருமைக்காக மணம் செய்துவிடுவது சரியாம்மா! அது அவனுடைய மனத்திற்குச் சம்மதமாகிவிட்டால் சரி; இல்லையேல் வாழ்வுக்கே பெருந் தாழ்வல்லவா உண்டாகிவிடும். கடவுளாக நம் நிலையறிந்து கொடுத்த செல்வத்தை நாம் நல்ல முறையில் வைத்து அனுபவிக்க வேண்டாமாம்மா....இது விஷயத்தில்"...

கிழவி பெருமூச்சும் கண்ணீரும் பெருக, "சிவம்! நீ என்னைத் பொய்யாக்கி விடுவாய் போலிருக்கிறது. நீ நினைக்கிறபடி நம் கண்மணி தத்தாறி தறுதலையல்ல. அவனுடைய ராமன் என்கிற பெயருக்குத் தக்கபடி வெகு கண்ணியமாய் சத்தியமாய் அவன் நடப்பான். அவன் இன்னார் என்கிற விலாஸமே தெரியாத நிலையிலிருந்தவனை முருகக் கடவுள் கருணையால் நமக்குக் கிடைத்து அவனை நாம் மிகமிக உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்து லக்ஷாதிப் ப்ரபுவாய்—உலகமே கொண்டாடத்தக்க யோக்

யதையுடையவனகச் செய்திருக்கும் ஒரு அபூர்வத்தை அவன் மறக்கவே மாட்டான். அவன் உண்மையில் எந்த ஜாதி குழந்தையோ! வேறு யார் கையிலாவது அகப்பட்டிருந்தால் எந்தக் கதியை அடைந்திருப்பானே; தன்னை உயிரினும் இனிய முறையில் நேசித்து உயர்ந்தப் பதவியில் வைத்துள்ளவர்களை ஒருபோதும் விரோதித்துக் கொள்ளவே மாட்டான். அவனிடம் எனக்குள்ள அன்பினல் அவனையே நான் நேரில் கூப்பிட்டுக் கேட்பதாக இருக்கிறேன். முதலில் உன்னிடம் தெரிவிக்காமல் சின்னஞ்சிறிய அவனிடம் சொல்வது கூடாதென்பது என் அபிப்ராயம். உன் மனைவி ராமய்யாவின் அத்தை மகளாதலால் அவளுக்குப் பூர்ண சம்மதம் என்பதை அறிந்தேன். ராமய்யாவை நாம் அன்று விரோதித்துக்கொண்டிருந்தோமோ அவன் கட்டாயம் உனக்கொரு வேசியை ச்ருஷ்டி செய்து அவள் மகன்தான் இவன் என்பதை நிரூபித்திருப்பான். நம் குடும்ப கண்ணியத்தை உத்தேசித்தும், நம் குடும்பம் எந்த ஒரு பிள்ளையின் மூலமாகவாவது விளங்க வேண்டுமென்ற அடங்காத ஆசையால் ராமய்யாவுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். நான் ராமனையே கேட்கப் போகிறேன். சாகக்கிடக்கும் என்னை அவன் கைவிடமாட்டான். என் ஆத்மாவை த்ருப்தி செய்வதோடு தானும் உயர் பதவியை அடைவான். அவனிடம் எனக்கு நம்பிக்கைச் சிறிதும் குறையவில்லை."

என்று கிழவி சொல்லும்போது ராமனுக்கு இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வேதனை. அதே சமயத்தில் தன்னுடைய பிறப்பு—வளர்ப்புத் தெரியாத ஒரு அவகேடான நிலையின் பயங்கரம், தள்ளாத கிழவி குடிவிளங்க வேண்டிய பேராவலால் துடிக்கும் பரிதாபம்....தான் தாசி மகன் என்று பின்னல் வரப்போகும் பயங்கரத்தின் அதிர்ச்சி, காதலின் களங்கமற்ற இன்பத்தின் உணர்ச்சி, தந்தையின் பாக்குவெட்டி நிலைமை... ஆக பலபல உணர்ச்சிகள் அலை அலையாக இதயக் கடலில் குமுறி எழுந்து அவன் பிடரியைப் பிடித்து உந்துகிறது. இத்தனை பூகம்பங்கள் ஒரேயடியாக அவனைச் சுழற்றிச் சுழற்றி அடிக்கும் நிலைமையில் சில விநாடிகள் ஸ்தம்பித்துப் பித்தன்போல நின்றான்.

மருகணமே ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல் தன்னிதயத்தைத் தானே அழுத்தித் தொட்டுக்கொண்டான். "ஏ! ராமா.......... உனக்கு உன் வரையில் உண்டாகிய காதல் வேணுமா? உன் பிறப்பும் வளர்ப்பும் அறியாதிருக்கையிலேயே உன்னை உலகம் கொண்டாடும் வகையில் ஒரு உருப்படியாக்கியக் குடும்பத்தின் கண்ணிய

மும், சீரிய ஒழுக்கமும், கிழவியின் வாக்கைக் காத்து நல்ல பெயரெடுக்கும் பாக்யமும் வேண்டுமோ? சொல்லு...... சொல்லு........" என்று தன்னையே தான் கேட்டுக் கொண்டான்.

"அப்பா! இந்த கட்டம் பெரிய சோதனையிலும் வேதனையிலும் நர்த்தனம் செய்கிறது. இந்தமாதிரி சமயத்தில் தானேப்பா அவர் மனமுடைந்து எங்கேயோ போய்விட்டார். அவர் தன்னுயிருக்கு ஒன்றும்"....என்று அகல்யா இதயம் துடிக்கக் கேட்டபோது அவர் கண்களில் நீர் நிறைந்து விட்டது. மெல்லத் துடைத்துக்கொண்டு...... "அகல்யா! பாஸ்கரனின் உயிருக்கு ஏதும் ஹானி வராதம்மா. என்னுள்ளத்தில் என்னவோ அவன் விஷயத்தில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. பயப்படாதே! வீணாக மனத்தை அலட்டிக்கொள்ளாதே, கதையைக் கேளம்மா."

பிறகு ராமனின் இதயம் என்ன சொல்லியது தெரியுமா! ஏ! ராமா!....நீ யாரு என்பது உனக்குத் தெரியுமா? உன்னைப் பெற்ற தாய் தந்தையர்களை நீ அறிவாயா? அன்று அந்த ப்ரமாதமான திருவிழாவில் நீ தன்னந்தனியாய் தவறிவிட்டிருந்த சமயம், உன்னை மேளக்காரன் தூக்கிச் சென்றிருந்தால், மேளம் வாசித்தோ, தவுலடித்தோ, தாளம் போட்டுக்கொண்டோ வளர்ந்திருப்பாய். தீவட்டிக்காரன் கையில் சிக்கி இருந்தால், தீவட்டி நிரந்தரமாகப் பிடித்திருப்பாய். வலையன் கையிலகப்பட்டிருந்தால் மீன் பிடித்துக் கடலிலே நீயும் மீனோடுமீனாய் மச்சாவதாரம் எடுத்திருப்பாய். பரியாரியிடம் கிடைத்திருந்தால் ஸெலூன் வைத்தோ அல்லது நாட்டு வழக்கப்படியோ தொழில் நடத்தியிருப்பாய். எந்தெந்த தொழிலாளி உன்னைக் கண்டெடுத்திருந்தாலும் நீ அந்தந்த நிலையில்தான் இருந்திருப்பாய். உன் அதிர்ஷ்டவசமாக இந்த மகானுபாவர்களின் கையில் நீ கிட்டியதால் உனக்கு அவமானமென்பது அண்டாமல், அபாரப் புகழும் கீர்த்தியும், மனிதத் தன்மையும் உண்டாகியது. இந்த சிறப்புக்குப் பங்கம் விளைவிக்காதே. உன்னுடைய ஒரே இதயம் களிப்பதைப் பார்க்காதே. இக்குடும்பத்தின் கண்ணியத்தையும், உன்னையும் என்றென்றும் உலகம் மதிக்கவேண்டும் என்கிற நல்லெண்ணத்தையும் நினைத்துப்பாரு.

பரதேசியாய்—அனாதையாய்—கிடைத்த குழந்தையை உருவாக்கியவர்களை த்ரோகம் செய்துவிட்டுத் தன்னுடைய காதலுக்கு மட்டும் மதிப்புக் கொடுத்தான், நாணயங்கெட்டவன். அவன் எந்த ஹீனஜாதியில் பிறந்தவனோ! தன் புத்தியைக் காட்டிவிட்டான்....என்று உலகம் நிந்திக்க

இடம் வைக்காதே. இத்தனை உயர்ந்த படிப்புப் படித்தும் தன் பெரியோர்களுக்கு அடங்கி காதலையும் த்யாகம்செய்து குடும்ப கண்ணியத்தை நிலை நாட்டினன் என்கிற நல்ல உத்தமமான பெயரைப் பெற்று வாழு. நீ காதலுக்காக ஆசைப்பட்டு ஓடிவிட்டால் உனக்குப் பிறக்கும் குழந்தை களுக்கும் நல்மதிப்போ? கவுரவமோ? குடியின் பெருமை யுடன் வழிவழியாக வரும் கீர்த்தியோ எள்ளளவும் வராது. ஜாக்ரதை! இந்தச் சிறிய த்யாகத்தைச் செய்து சாக விருக்கும் கிழவிக்குச் சாந்தியைக்கொடு. அந்தப் பெண்ணை நீ விலக்கினல் உன்னை தாசி மகன் என்றே உலகம் மதிக் கும்படி அந்த துஷ்டன் பறையடித்து விடுவான். இன்றைய ஆசைக்கு மட்டும் இடங்கொடுத்தால் நீதியா? என்றென் றும் சாச்வதமான சிறப்பைச் சம்பாதித்துக் கொள்வது முறைமையா? உனக்கு வரவிருக்கும் மகத்தான புகழுக்கு அழிவைத் தேடாதே வேரில் வென்னீரை ஊற்றாது குளிர்ந்த ஜலத்தை விட்டுக் குடும்ப வ்ருக்ஷத்தை நன்கு வளரச் செய்.......உம்.......நிற்காதே போ...போ...என்று சவுக்கடி கொடுத்துக் கழுத்தைப் பிடித்து உந்தித் தள்ளியது.

அவ்வளவுதான், ராமன் அந்த க்ஷணமே பறந்து சென்று பாட்டியின் கால்களில் விழுந்து வணங்கி, "பாட்டி! நான் சகல விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டுவிட்டேன். உன் மனங்கோணும்படி அப்பாவோ, நானே நடக்க மாட்டோம். உன்னிஷ்டப்படி கல்யா ணத்திற்கு ஏற்பாடு செய்துவிடு. நான் உங்களை மீறி அதிக ப்ரஸங்கியாய் ஒருநாளும் திரிய மாட்டேன். அப்பா! பாட்டியின் இஷ்டப்படி நடத்துங்கள்." என்று சொல்லி யதைக்கேட்டதும் பாட்டியின் உள்ளமும் உடலும் ஒருங்கே பூரித்து முகம் மலர்ந்து பொக்கைவாய் பிளந்துப் பொங்கிப் போய் பேரனைத் தடவி அணைத்து உச்சிமோர்ந்து "என் செல்லப்பா! முருகப்பெருமானளித்த மூத்தான கண் மணியே! இன்றுதான் என் மனது சாந்தியாயிற்று" என்று ஏதேதோ சொல்லி மகிழ்ந்தாள்.

அதிகம் வளர்த்துவானேன். அந்த நிமிடம் முதல் ராமனின் இதயத்தில் அடித்த புயலின் வேகம் சொல்லி முடியாது. 'சீதாலக்ஷ்மியை எப்படி மறப்பது? அவள் கண் முன்னல் இன்னொருத்தியுடன் எப்படி வாழ்வது. அந்த வாழ்வில் இன்பத்திற்குப் பதில் துன்பத் தீக்கனல் வீசி வதைக்குமல்லவா? இந்த சோதனையான விஷயத்தை லக்ஷ்மிக்கு எப்படிச் சொல்வது. இதைக் கேட்டதும் அவள் மனம் உடைந்துபோய் எப்படியாகி விடுவாளோ? இதென் னப் பெருங்கவலையாகி விட்டதே' என்று துடித்தான்.

தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூட துணிந் தான். ஆனால், குடும்ப கண்ணியத்தை அச்செய்கை எத் தனை தூரம் பாதிக்கும் என்பதை எண்ணி அந்த பேராபத் திலிருந்து மனத்தைத் தானே தெளிவு செய்துகொண் டான். அவனுடைய பிதாவுக்குக்கூட ராமன் இம்மாதிரி கட்டுப்பட்டது வியப்பிலும் வியப்பாக இருந்தது.

இரண்டு நாட்கள் ராமன், லக்ஷ்மி வீட்டிற்கே போக வில்லை. கடைசீ தரமாக லக்ஷ்மியை ஒருமுறைப் பார்த்து விட்டு இந்த துக்ககரமான விஷயத்தைச் சொல்லிவிட்டு வரவேண்டுமென்று துணிந்து சென்றான். என்ன ஆச்ச ரியம்! லக்ஷ்மி வெகு சந்தோஷத்துடன் ராமனை வரவேற்ற தோடு, "அப்பா ஊரிலில்லை, நாளை வருவார். தங்களு டைய விஷயங்கள் பூராவும் அப்பாவின் மூலமறிந்து நிரம்ப சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால், பெரியவர்களுக்கும் குடும்பத்தின் உன்னத கண்ணியத்திற்கும் முதல் ப்ரதா னம் கொடுப்பதுதான் மனிதர்களுடைய லக்ஷ்யமாகும். அதுதான் உலகம் உள்ளளவும் போற்றக்கூடிய சிறந்த செய்கையுமாகும். உங்களுடைய விவேகமும் உயர்ந்த படிப்பும் நல்ல விஷயத்தில் பயன்பட்டதைப்பற்றி அப்பா வும் நானும் பெருமகிழ்ச்சியடைகிறோம். நான் என் மனப் பூர்வமான சந்தோஷத்தைத் தெரிவிக்கிறேன். உங்கள் உத்தம குணத்தின் சக்தி என்றென்றும் ப்ரகாசிக்க பக வானை வேண்டுகிறேன்."

என்று பெரிய முதிர்ந்த மூதாதையைப்போல லக்ஷ்மி சொல்வதைக் கேட்ட ராமனின் திகைப்பும் ப்ரமிப்பும் கரைகடந்து விட்டது. வாய் திறந்து பதில் சொல்லவும் முடியாமல் மவுனத்திலாழ்ந்தான். தான் இதுவிஷயத்தைச் சொன்னதும் லக்ஷ்மி துக்கப்படுவாள்—கதறுவாள்—கண் ணீர் விடுவாள்—இது நியாயமா? என்றெல்லாம் ஏதேதோ சொல்வாள். அப்படிச் சொன்னால் நாம் என்ன பதில் சொல்வது என்றெல்லாம் எண்ணமிட்டுச் சென்ற ராம னுக்கு, நினைத்தொன்றும் நடந்ததொன்றுமாக ஆய்விட்ட தால் உண்மையில் லக்ஷ்மியின் மாசிலாத குணத்தின் மகிமையை எண்ணிப் பூரித்தான். அங்கு நின்று பதில் பேசவும் மாட்டாது தவித்தான்.

"லக்ஷ்மீ!" என்று தழுதழுத்த குரலில் கூப்பிட்டான். யாழினும் இனிய நாதத்துடன், "தாங்கள் கோழையல்லவே ......ராமன் நாட்டைவிட்டுக் காட்டை யடையாமல் நான் தான் பட்டாபிஷேகம் செய்து கொள்வேன். என்று மறுத்து ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் ராமாயணம் வளர்ந்தே இருக்காதல்லவா! அவன் கடமை, தர்மம்,

சத்யம், பித்ரு வாக்ய பரிபாலனம், அவதார ரகஸ்யம் ஆகியவைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்ததால் இன்றும் என்றும் ராமாயணம் ஜீவித்திருக்கிறது.

அதுபோல் அவன் பெயருக்கேற்ப நீங்களும் உங்கள் பாட்டியின் வாக்கைப் பரிபாலனம் செய்தீர்கள். உங்களுடைய பிறப்பின் (அவதார ரகஸ்யம்) மர்மத்தை வெளியிடாமல் கண்ணியமாகக்காக்க கடமைப்பட்டிருக்கிறீர்கள். தனிப்பட்ட மனோ ராஜ்யத்தின் கொந்தளிப்பை அடக்கி ஆள்வதுதான் நல்லது. நான் போகிறேன். உள்ளே வேலை இருக்கிறது."

என்று பெரிய தத்வார்த்த விளக்கத்தைக் கூறிவிட்டு ஒரே ஒரு பார்வையினால் ராமனின் உள்ளத்தையும் கண்களையும் சிதறவடித்துவிட்டுச் சென்றாள். ராமன் பறிகொடுத்தவன்போல் திரும்பினான். தன் மனத்திலுள்ள சூறாவளியை பிறர் அறியாதபடி சாமர்த்தியமாய் அடக்கிக் கொண்டு நகை முகத்துடன் உலாவினான்.

கல்யாணத்திற்குத் தாங்கள் தயார், முகூர்த்தம் வைத்து எழுதலாம். நிச்சயதார்த்தத்திற்கு என்று வரலாம்? என்று ராமனின் பிதா கடிதம் எழுதிவிட்டார். ராமனால் லக்ஷ்மியின் நினைவை மறக்கவே முடியாது இரவு பகல் ஏங்கி இளைத்தும் போய்விட்டான்.

அகல்யா! இங்குதான் தெய்வம் ஒன்றிருக்கிறது. மனிதர்களின் பாவ புண்ணியத்திற்கு ஏற்ற பலன்களை சமயா சமயமறிந்து பலனைக்கொடுத்து ரக்ஷிக்கிறது என்கிற தத்துவத்தை ராமன் அறிந்தான். ராமனின் பிதா கடிதம் போட்டு 10 தினங்களாகியும் பதில் வராததால் அது ஒரு வேளைத் தவறிவிட்டதோ என்று மறுகடிதமும் போட்டார். அதற்கு ராமய்யாவிடமிருந்து பதில் வராமல் வேறொரு பந்துவின் மூலம் பதில் வந்தது. என்ன பதில் தெரியுமா? ராமய்யாவின் குடும்பமே பாழாகி அவன் உயிருள்ள சவம்போல் படுக்கையோடு படுக்கையாகக் கிடக்கிறான். சொல்லவும் வெட்கம், சொல்லாவிட்டால் துக்கம். அதுபோல் ராமய்யாவின் பெண் சில தினங்களுக்கு முன்பு ராமய்யாவின் நில விஷயமான ஒரு எதிரியுடன் நட்புக் கொண்டு ஓடிவிட்டாள். ராமய்யாவின் மீது பழிவாங்கவே அந்த கிராதகன் இவ்வாறு செய்துவிட்டான். அது முதல் ராமய்யா உயிரிருந்தும் உயிரற்ற சவமாகவே இருக்கிறான். இனி உங்கள் நிலபுலன்களையும் என்னையே பார்த்துக் கொள்ளும்படி ராமய்யா எழுதச் சொன்னான். அவனுடைய நிலைமை கவலைக்கிடமே. இதை வெளியிட வேண்டாம். அவமானம்........

இதுவரை போதாதா விஷயம். இக் கடிதத்தைப் பாட்டிக்கு ராமனே படித்துக்காட்டினன். அடாடா! அதற்குமேல் சொல்லவா வேண்டும். ராமனை அப்படியே எங்கேயோ ஒரு இன்ப உலகத்திற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டது என்ருல் மிகையாகாது. அப்போது கூட இருந்த ராமனின் பிதா "அம்மா! உன்னுடைய வாக்கைப் பற்றி இனி கவலை இல்லையே! குழந்தைகள் மனமொருமித்து ப்ரேமை கொண்டிருப்பதை நான் நன்ருக இப்போதுதான் அறிந்தேன். ஆகையால் ஆக்ஷேபனை இன்றி என் சினேகிதர் வெங்கட்ரத்தினத்தின் பெண்ணைக் கல்யாணம் செய்துவிடுகிறேன். ராமனின் அதிர்ஷ்டம் ஸீதை கிடைத்துவிட்டாள்" என்று அவரே ராமனைத் தட்டிக்கொடுத்துக் குதூகலித்தார்.

பாட்டி தனது பொக்கை வாயைப் பெரிதாகத் திறந்து சிரித்துக் கொண்டே ராமனைத் தன்னருகிலழைத்துத் தடவிக்கொடுத்துக் கட்டியணைத்து "என் செல்வமே! என் வார்த்தையின் ப்ரதிக்ஞையையும் காப்பாற்றினய். உன் மனே பீஷ்டமும் இனி தடையின்றி நிறைவேறலாம். நிஜமாகச் சொல்லு. அந்தப் பெண்ணை நீ நேசிக்கிருயா? உங்கப்பா சொல்வது உண்மையா!" என்று ஒரு கேள்வியைப் போட்டாள்.

ராமனுக்கோ! இக்காலத்தைப் போல பட்டவர்தனமாகச் சொல்லும் பழக்கம் அக்காலத்தில் குறைவல்லவா! அதனல் கூச்சமாக இருந்தது. இருப்பினும் வேறு எந்த பெண்ணுக்காவது வழிவைத்து மடக்கிவிடப் போகிருளோ என்கிற பயத்தால், தலை குனிந்தபடி "ஆமாம் பாட்டி. இது தெய்வச் செயலால் உண்டாகிய நேசமேயன்றி மனிதச் செயலில் இல்லை. என்மீது குற்றமா?...கோபிக்கிருயா பாட்டி...அந்தப் பெண் மிகவும் கெட்டிக்காரி. நல்லவள்...."

"அடேடே! இதை எல்லாம் சொல்வதற்கு நானிருக்கிறேனடா! நீயே சொல்லிவிடாதே" என்று அவன் அப்பா குறுக்கிட்டதும் வெட்கத்தால் முகம் கவிழ்ந்தது. இதற்குள் பாட்டி ராமனைத் தடவியபடியே, "என் ராஜா! உன்மீது எனக்குக் கடுகளவுகூட கோபமில்லை. அந்தப் பெண் கூட நம் வீட்டிற்கு அன்று வந்திருந்தாளாம். நான் சரியாகப் பார்க்கவில்லை என்று முடிப்பதற்குள் அம்மா! இன்று மாலை இங்கு கட்டாயம் அவர்கள் வருவார்கள். பெண்ணை நீ பார்ப்பதோடல்லாமல் பேசியும், பாடிக் கேட்டும் களிக்கலாம்....ராமா! இனி நீ போகலாம். உன் காரியம் ஸித்தியாகிவிட்டது" என்று அப்பாவே அவனுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டார்.

அன்று லக்ஷ்மி இங்கு வரப்போகிறாள் என்பதை அறிந்ததும் ராமனுடைய சந்தோஷம் கட்டுமீறிப் பொங்கியதால் வெளியே போகாமல் காத்துக் கொண்டிருந்தான். குறிப்பிட்ட நேரத்தில் லக்ஷ்மி என்றால் அஸல் சாக்ஷாத் லக்ஷ்மியேதான் நடந்து வருகிறாளோ என்று ப்ரமிக்கும்படி வந்தாள். அவளிடம் தன்னுடைய ஜெயத்தைக் கண்களால் தெரிவிக்கத் துடிதுடித்துக் கொண்டு நின்றான் ராமன்.

குனிந்த தலை நிமிராமல் லக்ஷ்மி உள்ளே போகும்போது ஒரு புதிய சோபையும், தனிக் கவர்ச்சியும் பொங்கி வழிந்தது. அவர்கள் என்ன பேசினார்களோ! ராமனுக்குத் தெரியாது. ஆனால் லக்ஷ்மி பாடிய மதுர கீதத்தின் ஒலி இவன் செவிகளுக்கு தேவாம்ருத விருந்தாக இருந்தது. சமயத்திற்குத் தக்கபடி "ஈதினமே ஸுதினமு" என்கிற லதாங்கி ராகப் பாட்டைப் பாடி தன்னுடைய மகிழ்ச்சியை அதன்மூலம் தெரிவித்தாள். அதன் பிறகு ஒரு மாதத்திற்குள் கல்யாணமே அதிவிமரிசையாக நடந்து விட்டது.

அப்பாடா! இந்த கட்டத்திற்குத்தான் காத்திருந்தேன். எப்படியும் நீ ஸீதாலக்ஷ்மியை அடைந்துவிட்டாய் என்பது தெரிந்திருந்தாலும் அதற்கு விக்னங்கள் எப்படி வந்தது, எவ்வாறு நீங்கியது, இதையறியவே இதுகாரும் கேட்டுக் கொண்டிருந்தேன். "ஏம்பா....அந்த மனிதர்களில் இப்போது யார் யார் இருக்கிறார்கள்........அந்த ராமய்யா தலைந்தானா இன்னும் இருக்கிறானா? அவன்தான் ஒருவேளை இப்படி நம் தலையை உருட்டுகிறானா?" என்று குறுக்கே கேட்டாள் அகல்யா.

"கண்ணா! ஒரே ஒரு பாடம் நான் அவனிடம் கற்றுக் கொண்டது என்னவென்றால் துஷ்டனாக உலகில் இருந்து பலரை வாட்டியும், மிரட்டியும், உபத்திரவித்தும் தான் சுகப்பட நினைப்பதில் படுதோல்வியும் நீங்காத அவமானமும்தான் ஏற்படும் என்பதாகும். அவன் துஷ்டனாயிற்றே என்று பாட்டி பயந்து நடுங்கினாள். துஷ்டனுக்கும் அவனையடக்க மற்றொரு துஷ்டன் காத்திருக்கிறான் என்பதை நன்றாக உணரவேண்டும். யாருமே தனக்கு மிஞ்சியவர்கள் இல்லை என்கிற நினைப்பை அறவே விட்டுவிட்டால் விரோதமோ அதனால் உண்டாகும் கஷ்டங்களோ, ஒரு நாளும் வராது. தெரிந்ததா! ராமய்யா என் கல்யாணத்திற்கு முன்பே இறந்து தலைமுழுகியாகிவிட்டது. இம்மாதிரி உளவறிந்து செய்கிறவர்கள் யாராக இருக்குமென்று நான் கண்டுபிடித்து விடுகிறேன். பயப்படாதே" என்றார்.

"அப்பா! அனாதைப் பிண்டம் என்று அந்த மாமி கத்தியதற்கு என்னப்பா ஆதாரம்" என்று கேட்கும் போது கோபமும் ஆவேசமும் அவள் குரலில் த்வனித்தது. "அதுவாம்மா! அதுவும் ஒரு வேடிக்கைதான். கல்யாண மாகிய மறுவருடமே என்னை சீமைக்கனுப்ப சர்க்கார் அனுமதி கிடைத்துவிட்டது. அப்போது நானும் கூடத் தான் வருவேன் என்று உன் தாயார் பிடிவாதம் செய் தாள். "படித்த பெண், பணக்காரப் பெண், அழைத்துத் தான் போயேன்" என்று என் பெற்றோர்கள் கூறிவிட் டார்கள். சீமைக்குப் போவதென்றால் இக்காலத்தைப் போல் வசதி அக்காலத்தில் உண்டா! கப்பலில் கிடந்து நாட்கணக்கில் அவஸ்தைப்பட்டுச் செல்லவேண்டும். உன் தாயார் சீமைக்கு வருவதே அதிசயம். அப்போது நீ நாலு மாதத்தியக் குழந்தை. உன்னை எடுத்துச்செல்ல மட்டும் உன் தாத்தா, பாட்டி அனுமதிக்கவில்லை. ஆகையால் உன்னை அவர்களிடம் விட்டுவிட்டு நாங்கள் மட்டும் சென் றோம்.

சென்ற இடத்தில் நம் தாய்நாட்டிலிருந்து எங்களைப் போலவே ஒரு தம்பதிகள் இருவரும் படிப்பதற்காக வந்திருந்தார்கள். வந்த இடத்தில் அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. நாங்கள் இருவரும் ஒரே விடுதியில் தங்கி ஒரே குடும்பமாக ஒற்றுமையாக இருந்தோம். என் படிப்பு ஒரு வருஷத்தில் முடிந்து நாங்கள் திரும்பிவிட்டோம். அப் போது அவர்களுடைய படிப்பு முடியவில்லை. அங்கு தங்க வேண்டியதாயிற்று. அதனால் அந்தக் குழந்தையை மட்டும் கொண்டுபோய் அவளுடைய தாயாரிடம் விட்டுவிடும்படி எங்களிடம் அனுப்பிவிட்டாள். அதை நாங்கள் கொண்டு வந்துவிட்டது எப்படியோ ஊரறிந்து விட்டதுடன் அதே குழந்தைதான் நீ என்று சிலர் கயிறு திரித்துவிட்டார்கள். உடனே எனக்கு வெகு தூரத்தில் வேலையாகி விட்டதால் நான் அந்த ஜனங்களிடையே இருக்கவில்லை. உன்னையும் கூட்டிக்கொண்டு போய்விட்டோம். கால வித்யாஸத்தில் சில வருஷத்திற்குள் என் பெற்றோர்கள் மறைந்து விட் டார்கள். நான் சீமையிலிருக்கும்போதே என் பாட்டி காலமானாள். என்னுடைய அத்தைகள்தான் உனக்கே தெரியுமே. இரண்டொருவர்கள்தானிருக்கிறார்கள். நிலத்தையும் ஒரு முக்யஸ்தர் கவனித்து வருகிறார். இந்தப் பயல் தீக்ஷிதன் என்பவன் யார் என்று கண்டுபிடித்து விடுகிறேன் இரம்மா, என்று சமாதானப் படுத்தினார். "அப்பா நீ வேசி மகனல்ல. நான் அனாதைப் பிண்ட மல்ல என்பதை இப்போதே நாம் போய் அந்த ப்ரம்ம ராக்ஷஸி மாமியிடம் கூறிவிட்டு ஓடி வந்துவிடலாம் வாப்பா ....உம்....வா..." என்று அவஸரப்படுத்தினாள்.

இதற்குள் இச்சம்பாஷணையில் கலந்துகொண்ட ஸீதம்மாள் "கண்ணா! அவஸரப்படாதே. இத்தனை நேரம் கதை கேட்டாயே! அதன்படி பொருமையும், கூர்ந்து யோசிக்கும் புத்தியும் வேண்டாமா? இந்த சமயம் நீ போய் சொன்னால் வேண்டுமென்று கதை கட்டிக்கொண்டு வந்து சொல்லியதாகவே அந்த அல்ப மனிதர்கள் நினைப்பார்கள். உன் அப்பா விவரமாய்ச் சொல்லிய பிறகு நானும் சொல்கிறேன். உன்னைப்போல் நான் காதல் உடைந்த சமயம் பதறினேனா.. சாந்தியை இழந்தேனா....உன் அப்பா மீது கடுஞ்சினங்கொண்டு வெறுத்தேனா... இல்லை. அந்த உத்தம நிலைதான் உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்தது. என்று என் பிதா எப்போதும் சொல்லுவார். கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது. சற்றுப்பொரு. முதலில் நமது கடமை பாஸ்கரனின் இருப்பிடமறிவதேயாகும். நாங்கள் இத்தகைய கஷ்டங்களை அனுபவித்திருப்பதால் தான் இத்தனை பெரிய எதிர்ப்பிலும், பயங்கரத்திலும் மனம் உடைந்து பின்னடையாதிருக்கிறோம். நான் இதைப் பற்றி உன் அப்பாவிடம் சொல்லியபோதுகூட நம்முடைய பழங் கதைகளை நினைப்பூட்டியே கண் ஜாடை செய்து அவருக்குப் பொருமையை நிலைநாட்டினேன் தெரியுமா! ஆதலால் நீ அவஸரப்படாதே. அந்த உத்தமன் எங்கு சென்றான் என்பதை முதலில் பார்ப்போம். நீ இந்தப் பழங்கதையைக் கேட்டு உன் மனத்தை த்ருப்தி செய்து கொள்வதற்காகச் சொன்னாரே யன்றி இதைக் கொண்டு இப்போதே ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்துவிட வேண்டாம்......வெகு அகாலமாகி விட்டது. பூமாவைப் போய் கவனித்துவிட்டுவா....ஏதாவது நீராகாரமாவது சாப்பிட்டுப் படுத்துக்கொள். பொழுது விடியட்டும் பார்த்துக்கொள்ளலாம். நீ இனி ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டாம். சகலமும் கவனிக்க நான் ஏற்பாடு செய்தாயிற்று" என்று ஸ்ரீ மகாலக்ஷ்மி புருஷகாரத்வம் செய்வதுபோல் ஸீதாலக்ஷ்மி தற்கால சாந்திக்காக இந்தப் பெரும் காட்டாற்று வெள்ளத்திற்கு ஒரு சிரிய அணைகட்டுப் போட்டு இருவரையும் சமாதானப்படுத்தினாள். அந்த அல்பப் பயல் தீக்ஷிதன் யார் என்பதைக் கண்டுபிடித்துப் பழிவாங்கி விடவே அகல்யாவின் உள்ளம் துடித்தது.

# 16

## மணத்தின் பலன் மரணமா ?

பக்ஷிஜாலங்கள் உதயராகம் பாடி உலக மக்களைத் தட்டி எழுப்புவதுபோல தங்கள் இனிய குரலில் சப்த நாதங்களை எழுப்பியவாறு சுருசுருப்பாய் பறந்து கொண்டிருக்கும் காட்சி மனோரம்யமாயிருந்தது. ரயில் ஸ்டேஷனில் குறித்த நேரத்தில் வண்டி வந்து நின்றதும் பக்ஷிகளைப்போல் தம்தம் மனிதர்களைத் தேடிக்கொண்டு ஜனங்கள் இறகின்றி மனத்துடிப்புடன் பறந்தார்கள். ஆனால்....சரீரத்தில் சக்தியில்லை. மனத்தில் தெம்பில்லை. கண்களில் களையில்லை. ஏக்கம், துக்கம், பிரிவு முதலிய பெரும் அலைகள் இதயக்கடலில் குமுறிக் கொந்தளித்துப் புரட்டித் தள்ளுகிறது. அத்தகைய இருண்ட கடலிலும் எங்கோ ஒரு தீபஜோதி தெரிவது போல் அகல்யாவின் முகச் சந்திரன் தோன்றி மறைகிறது. பூமாவின் சாந்தமே வடிவான-ஏக்கமே பிம்பமான பரிதாப முகத்தின் தோற்றம், ஆலகால விஷத்தினும் கொடிய விஷம்போன்று சீறிப் பாயும் பயங்கர காளிகாதேவியைப்போன்ற அகிலாண்டத்தின் கோர ஸ்வரூபம். ஐயோ என்று அலரக்கூடிய கண்ராவி நிலையில் அண்ணனின் உருவம். அப்பாவி மனிதரான தந்தையின் தோற்றம். எல்லாம் ஒருங்கே ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி சுற்றிச் சுற்றி வட்டமிட்டு நடுக்கமுறச்செய்கிறது.

இந்நிலையில் கையில் ஒரு சிறிய பெட்டியுடன் நடைச்சவம்போல் நடந்து எங்குபோகிறோம்? என்னசெய்கிறோம்? என்பது தெரியாமல் ஸ்டேஷனுக்கு வெளியே வந்து நின்றான் பாஸ்கரன்.

“ஸார்! டாக்ஸி வேணுமா?” என்ற குரலே அவன் சிந்தனை மேகத்தைக் கலைத்து உணர்ச்சியை உண்டாக்கியது. உடனே தன்னைச் சமாளித்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்கு டாக்ஸியில் போய்ச் சேர்ந்தான். வெகு சிறிய வீடுதான். ஆனால் மிக அழகாயும் கவர்ச்சிகரமாயும், பார்ப்பதற்கு சாந்தியைக் கொடுக்கக்கூடிய நிலையிலமைந்திருந்தது கண்டு ஒருவாறு சந்தோஷத்துடன் உள்ளே சென்று “ராமு!....ராமு!....” என்று கூப்பிட்டான்.

நவீனக் கொண்டையும் நகைத்த முகமும் குருகுருப்பான விழிகளும் கூடிய நங்கையொருத்தி உட்கார்ந்திருந்தாள். பாஸ்கரனைக் கண்டு சடக்கென்று எழுந்து நின்று "வாருங்கள்! அவர் வெளியே போயிருக்கிறார். இப்போதே வந்துவிடுவார்....இப்படி உட்காருங்கள்" என்று முன்பின் பழகியவள் போலக் கூறி ஆஸனத்தைக் காட்டினாள்.




பாஸ்கரனுக்கு ஒன்றுமே விளங்காமல் சற்று விழித்தவாறு சுற்றுமுற்றும் பார்த்தான். தான் நாடிவந்த ராமு

வின் வீடுதானா? அல்லது வேறு அந்தப் பெயருள்ள ஆஸாமியின் வீட்டிற்கு வந்துவிட்டேனா என்கிற பெரிய சந்தேகம் உண்டாகி கலக்கிய சமயம் சுவற்றில் மாட்டியிருந்த புகைப்படம் சடக்கென்று கண்ணில் பட்டதும் திடுக்கிட்டான்.

இதே படத்தைத்தான் அன்று அவன் பெற்றோருக்குத் தபாலில் அனுப்பி அதிர்ச்சி தரக்கூடிய கடிதமும் வைத்திருந்தது பளிச்சென்று நினைவுக்கு வந்ததும் அதையே உற்று கவனித்தான். அதே சமயம் ஒரு பை நிறைய காய்கறிகள், சில பழவகைகள் வாங்கிக்கொண்டு ராமு உள்ளே நுழைந்ததும் தான் கனவில் கூட எதிர்பார்க்காத விதம் பாஸ்கரன் அங்கு நிற்பதைக் கண்டு இன்னதென்று கூறத் திறமற்ற மகிழ்ச்சியை அடைந்து கையிலிருப்பவைகளை அப்படியே வைத்துவிட்டு பாஸ்கரனைச் சேர்த்துத் தழுவிக்கொண்டு “டேய்! பழி! புகைப்படத்தை நன்றாகப் பாருடா! நன்றாக இரண்டு கண்களையும் அகல விழித்து அதிசயத்துடன் பாரு. எனக்கிப்போதுள்ள பூரிப்பில் பேசக்கூட தெரியவில்லை. உன்னைப் பார்த்து எத்தனை யுகங்களாகிவிட்டது. லலிதா! காப்பி கொடுத்தாயா?” என்றான். சிரித்த முகத்துடன் “காப்பி மட்டுமா! இதோ டிபனும் கொண்டு வந்தேன். நீங்கள் இருவரும் எடுத்துள்ள புகைப்படத்தைப் பார்த்திருப்பதால் இவரைப் பார்த்த உடனே உங்கள் சிநேகிதர் ஸ்ரீமான் பாஸ்கரன் ஐ. ஏ. எஸ். என்பதைத் தெரிந்துகொண்டு விட்டேன்” என்று வெங்கல மணியடிப்பதுபோல் தானே கணீரென்று சொல்வதைக் கேட்டு பாஸ்கரன் விழித்தபடி “ராமு!....உனக்கு என்னைக் கண்ட களிப்பில் பேச முடியவில்லை. எனக்கோ! பெரும் புயல் காற்றிலடிபட்டுத் தத்தளித்துத் தடுமாறி இங்கு ஒரு திவ்ய சாந்தியைக் காண ஆவலுடன் ஓடிவந்தேன். நான் நினைத்தது ஒன்றும் நடப்பது ஒன்றும் கண்ணால் காண்பது ஒன்றுமாகி என்னைக் குழப்புகிற வேகத்தில் பேசத் தெரியாது வாயடைத்துவிட்டது......சாப்பாடு பிறகு ஆகட்டுமடா......இதென்ன போட்டோ! சென்ற வாரம் நான் நம் க்ராமத்திலிருந்தேன். உன் பெற்றோரிடம் நான் பேசுகையில் இந்தப் படமும் உன்னுடைய அனுகுண்டு கடிதமும் வந்தது. நானே படித்துப் பார்த்து உன்னைத் திட்டு திட்டென்று திட்டினேன். கிழங்கள் மூர்ச்சையே போட்டு விழுந்துவிட்டதுகள்........இதென்ன கூத்து. இந்த விவரமறிந்துதான்....

காப்பி குடிப்பாயாக்கும். சரி.......அப்படியே செய் என்று ஒரு மின்வெட்டு பாஷையில் கண்ணால் லலிதாவிடம்

பேசினன். பாஸ்கரனை வலிய உட்காரவைத்துக் காப்பிக் கோப்பையை அவன் வாயில் தானே வைத்துக் குழந்தைக்குக் கொடுப்பதுபோல், உம்....உறிஞ்சிக் குடிடா...உம்... என்று வெகு சுதந்திரமும், கரைகடந்த சினேகத்தின் சிறப்பும் ஜ்வலிக்கக் கூறினன்.

சில நிமிஷங்களுக்குள் ஒய்யாரமான நடையும் கவர்ச்சிகரமான தோற்றமும் கூடிய பஞ்சாப் தேசத்துப் பெண்ணெருத்தி வந்து நின்று 'நமஸ்தே' என்ருள். ஏற்கெனவே உள்ள பாஸ்கரனின் துக்கமும், சோகமும், குமுறும் வேகத்திலும் இந்த இந்திர ஜால காக்ஷியால் அவைகளை மறந்து படத்தையும் எதிரில் நிற்கும் பெண்ணையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, ஏய்! திருட்டு ராமு! இதென்ன ரகஸியம் சொல்லு. என்று அவன் தோளைப்பிடித்து உலுக்கினன்.

ராமு சிரித்துக்கொண்டே, பாஸ்கரா! ஒரு ரகஸியமுமில்லை. மூடு மந்திரமும் இல்லை. என் பெற்ருேர்கள் தினம் ஒரு பெண்ணைப் பற்றி விமர்சனம், புகைப்படம், வரதக்ஷிணை, வ்யாபார முடிவு, சீர் வகைகள், நகைநட்டு முதலிய அணுகுண்டுகளை என்மீது வீசி எரிந்தவண்ணமாக இருக்கிருர்கள். நாம் சிறிய வயது முதல் வரதக்ஷிணை வாங்கும் கொடிய வழக்கத்தை வேருடன் அறுத்துப் புதைத்துவிட வேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டு பேசுவோமல்லவா? அந்த நல்ல நினைப்புக்கு இடமே இல்லாது போய் விட்டது. நான் எத்தனை எழுதியும் பயனில்லை.

நான் இங்கு வேலைக்கு வந்ததும் இதே வீட்டில் இதே ஒரு தனி விடுதியை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கி வந்தேன். என் ஆபீஸிலேயே பெரிய உத்யோகம் வகிக்கும் ஸ்ரீ பரசுராமன் இந்த வீட்டின் சொந்தக்காரர். அவர் வெகு வருஷ காலமாக இங்கு குடித்தனம் நிலைத்து விட்டவர். அவருக்கும் எனக்கும் அன்புச் சங்கிலி பலமாகப் பிணைக்கப்பட்டதில் லலிதாவுக்கும் எனக்கும்.......

பாஸ்:—காதல் கயிற்ருல் பெருத்த கட்டுகள் விழுந்து விட்டதாக்கும். அதுதானே...

ராமு:—அட இருடா! இதைக் கேட்கவும் சொல்லவும் வேண்டுமா? இப்படி ஒரு பெண் இருக்கிருள் என்றும் எழுதினேன். அவர்கள் மசியவில்லை. அவர்களையும் த்ருப்தி செய்து நாமும் சாந்தியடைவது என்ருல் நடக்கிற காரியமாகத் தோன்றவில்லை. ஒன்று நான் திண்டாட வேண்டும். சபதம் முறியடிக்கவேண்டும். மற்ருென்று அவர்கள் முதலில் ஏமாற்றம், அதிர்ச்சி அடையவேண்டும். பிறகு சரியாகிவிடும் என்கிற ஒரு அஸ—ர தைரியம் பிறந்து

விட்டது. நான் துணிந்து லலிதாவை சாஸ்த்ரயுக்தமாக மணந்துகொண்டு அவளுக்கே இப்போது நிற்கும் வேஷத்தை யணிந்து கல்யாண கோலத்துடன் புகைப்பட மனுப்பி விட்டால் இனி என் ப்ராணனை வாங்கும் படலம் நின்றுவிடும். பிறகு கைநிறையப் பணத்துடன் லலிதா வைக் கூட்டிக்கொண்டு நேரே சென்று காலில் விழுந்து மன்னிப்புப் பெற்று விடுவது என்று முடிவு செய்து விட்டேன். சமய சஞ்சீவியாய் நீ எப்படி வந்தாய். வியப் பாக இருக்கிறதே. அதுசரி, உன் பெற்றோர்கள் உன் மீது.......

பாஸ் :—ராமூ! அதைக் கிளப்பாதே. சாவதானமாகச் சொல்கிறேன். அந்த ஒரு அதிர்ச்சியினாலேயே நான் இங்கு வந்தேன். ராமூ! இத்தகைய அஸுர தைரியம் உனக்கு எப்படி வந்தது. இம்மாதிரி துணிச்சலுடன் செய்ததை......

ராமு :—உஸ்...மெல்லப் பேசு. லலிதாவுக்குக் கேட்டு விடப்போகிறது. துணிச்சலுடன் செய்தது உனக்குப் பிடிக்கவில்லை யல்லவா?........பாஸ்கர் நான்கூட தப்பான வழியில் செல்லத் துணியமாட்டேன். என்னுடைய சூழ் நிலை, தேகநிலை என்னை அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்றாகிவிட்டது. ஒரே வீட்டிலிருந்த நாங்கள் பயந்து நடுங்கிப் பதுங்கி ஒதுங்கி காலங் கழித்தும் நீடிக்க முடியவில்லை. இதனால் எனது உடல்நிலை பாதித்து விட்டது. உடனே கல்யாணம் செய்தால் சரியாகிவிடும் என்று டாக்டர் சொல்லிய பிறகே நானும் துணிந்தேன். உன் கதை என்னப்பா! அதைச் சொல்லேன். நாம் ஒரு உல்லாஸ யாத்திரை போயிருந்தபோது ஒரு கலெக்டர் முகாம் போட்டிருந்தார். அவருடைய அழகு வெள்ளமான பெண் உன்.......

பாஸ் :—ராமு....அதே பெண்தான் என் உள்ளத்தை யும் உயிரையும் கவர்ந்த கட்டழகி அகல்யா. (நடந்த சக லத்தையும் கூறி) இக்கதியாகி விட்டதால் செய்வதறியாமல் சாகவும் துணிந்து ஓடிவிட்டேன். பிறகு சாவு நம்முடைய கையிலில்லை, பகவானிருக்கிறான் என்கிற நம்பிக்கை என் தளர்ச்சி பெற்ற மனத்தை இறுக்கியது. நான் செத்தால் அகல்யா சாவாள். அவளுடன் அவள் பெற்றோர்...... அடாடா எத்தனை கொலைகள். நினைக்கவே பயமாயிருப்ப தால் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு சடக்கென்று உன்னிடம் வரும் ஒரு ஆசை அடித்து இழுத்தது. வந்து விட்டேன்.

ராமுவுக்கு பாஸ்கரனின் விஷயங்கள் இதயத்தில் வாள்கொண்டறுத்து ரத்தக்கண்ணீரைக் கக்கவைத்தது.

அத்தனை அதிர்ச்சி அலங்கோலத்திலிருந்து வந்திருப்பதனால் தன் உடம்பு இத்தகைய தளர்வும் சோர்வும் அடைந்து பிழிந்த துணிபோலும் உறித்த நாருபோலும் காணப்படுகிறான் என்று தனக்குள் எண்ணி பெருமூச்சு விட்டபடி "பாஸ்கர்! நீ சொல்லிய விஷயங்களைக் கேட்கும்போது ஏதோ கதைகேட்பதுபோலும், நாவல் படிப்பதுபோலவும் தோன்றியதே யன்றி இப்படியும் நடக்குமா! என்கிற வியப்புதான் என்னைத் திகைக்கவைக்கிறது. இந்த பயங்கரமான சோதனைக்கு நீ என்ன செய்யப்போகிறாய். உன்னுடைய தீர்மானந்தான் என்ன?" என்று அன்பொழுகக் கேட்டான்.

பாஸ்: தீர்மானமா?....ராமு! இப்படியே ஒரு பெரிய பூகம்பம் வந்து என்னை..."

ராமு: அடேடேடே...நிருத்தப்பா! நிருத்து. உன்னுடைய கஷ்டம் தாங்காமல் நீ பூகம்பத்தை வெகு ப்ரியத்துடன் வரவேற்கிறாய். கஷ்டங்கள் தீர்ந்து புதிய இன்ப உலகத்தில் அடி எடுத்துவைத்துள்ள எங்களையுமல்லவா அந்த பூகம்பம் விழுங்கி ஏப்பமிட்டுவிடும். அதுமட்டுமா!.... பாவம். உன் தாயார் பிழைத்து வேறுநல்ல இடத்தில் பெண்பார்த்து 20 ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை வாங்கி உனக்குக் கல்யாணத்தை மங்களகரமாகச் செய்யவேண்டிய புண்ணியவதியைக் கூடவன்றோ அந்த பூகம்பம் கபளீகரம் செய்துவிடும்...

பாஸ்: ராமு! இதுதானா உனக்கு விளையாட்டுச் சமயம். என்னுள்ளம் படும் வேதனையை நான் எப்படித்தான் அனுபவிக்கிறேன் என்பது உனக்குத் தெரியவில்லை. உன்னிடமாவது சிறிது சாந்தியை அடையலாமென்று வந்தால் விளையாடுகிறாயே...

ராமு: பாஸ்கர்! கோபிக்காதேப்பா! மனிதனுக்கு எந்த ஒரு விஷயத்திலும் சோதனைகள் வருவதும் அதன் நடுவில் மின்னல்போல் விளையாட்டுக்களும் தோன்றி மறைவதும் சகஜந்தானப்பா....பாஸ்கர்! நான் சொல்வதைக் கேள். நான் இன்றே ஆபீஸில் ஒருவாரம் லீவ் போட்டுவிட்டு உன் ஊருக்குப்போய் நீ இங்கு ஜாக்கிரதையாயிருப்பதைக்கூறிவிட்டு உன் மாமனையும் உன்னுயிர்...

பாஸ்: வேண்டாம்....ராமு! வேண்டவே வேண்டாம். இங்கிருந்து நீ போவதற்காகவா அங்கிருந்து நான் பைத்தியக்காரன்போல ஓடிவந்தேன். எனக்கு உற்ற துணையும், தனிமையும், சாந்தியும் கலங்கிக் குழம்பித் தவிக்கும் மனத்திற்குத் தெளிவையும் உன்னிடம் பெறலாம் என்ற நம்பிக்

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

**ரூ. 4.**
சாந்தியின் சிகரம்

**ரூ. 3.**
வைதேகி (2 பாகம்)
நிர்மலநீரோடை

**ரூ. 2-50**
மலர்ந்த இதழ்
வனக்குயில்
மதுரகீதம்

**ரூ. 2.**
அநாதைப்பெண்
சுகுணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
மாதாஞ்சலி
புனிதவனம்
குணக் குன்று
ஜீவநாடி
அப்பதியும் ராஜாராம்
[முதல் பாகம்]

**ரூ. 1-75**
கலாநிலயம்
சிலாசாசனம்
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

**ரூ. 1-50**
பவித்திரப்புதுமை
ஓவியப் பரிசு
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

**ரூ. 1-25**
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோவில்
வீரவஸந்தா

**ரூ. 1-13**
அபராதி

**ரூ. 1.**
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

**நயாபைசா 75**
பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

**நயாபைசா 50**
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

தீபஸ்தம்பம் 4-0
உதயசூர்யன் 1-25
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-25
தியாகபலி 0-75
ஜயந்திசிந்தனைகள் 1-50
கோதாஹ்ருதயம் 0-75
ஸ்ரீஸ்துதி 0-25

## வை.மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் ரூ. 1-50
பாலர் மோகினி 12 சிறு கதைகள் 1-0

---

**சுத்தானந்த பாரதி**
காந்தி கீர்த்தனம் 3-50

---

**ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0

---

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.